வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு

Eelanadu — ஈழநாடு

மாருதி
MARUTHI MONEY EXCHANGE
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com    மலர் : 06    06.08.2025 புதன்கிழமை    இதழ் : 218    பக்கங்கள் : 12

# செம்மணி புதைகுழி விடயத்தில் சர்வதேச தடயவியல் விசாரணை

## ஆஸி. உதவவேண்டும் என செனட்டர்கள் கோரிக்கை

கன்பெரா, ஓக. 06

**இலங்கையின் யாழ்ப்பாணத்தில் உள்ள செம்மணி புதைகுழிகளிலிருந்து வெளியாகும் தகவல்களை தொடர்ந்து நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்காக அவுஸ்திரேலிய செனட் உறுப்பினர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.**

செம்மணி மற்றும் பிற புதைகுழிகள் குறித்து சர்வதேச அளவில் கண்காணிக்கப்படும் தடயவியல் விசாரணைக்கு அவுஸ்திரேலியா உதவவேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர்.

அந்த நாட்டு பாராளுமன்றத்தில் இது தொடர்பான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

செம்மணியில் மேற்கொள்ளப்படும் தடயவியல் அகழ்வுகளின்போது, சிறுவர்களின் எச்சங்கள், அவர்களின் பாடசாலைப் பைகள் உட்பட அட்டூழியங்களுக்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த கண்டெடுப்புகள், சர்வதேச சமூகத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளன.

இலங்கையின் உள்நாட்டு போரின்போதும் அதற்குப் பிறகும் நடந்தவை என்று கூறப்படும் போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை குறித்து சுயாதீன விசாரணை நடத்தவேண்டும் என்ற அவசர கோரிக்கைகளை மீண்டும் எழுப்பியுள்ளது என்று அவுஸ்திரேலிய செனட் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில், இந்த விடயத்தில், அவுஸ்திரேலிய அரசு, உறுதியான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று செனட்டர்கள் அவுஸ்திரேலிய பாராளுமன்றத்தில் வலியுறுத்தியுள்ளனர்.

அத்துடன், இலங்கையில் உள்ள செம்மணி மற்றும் பிற புதைகுழிகள் குறித்து சர்வதேச அளவில்

11

## மாகாண சபை தேர்தலை நடத்துவதில் சட்ட சிக்கல்

### தேர்தல் ஆணைக்குழுத் தலைவர்

மட்டக்களப்பு, ஓக. 06

மாகாண சபைகள் தேர்தல் தொடர்பில் அரசமைப்பு தொடர்பான ஏற்பாடுகள் காணப்பட்டிருப்பினும் எல்லை நிர்ணயம் தொடர்பான பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்த்து பாராளுமன்றத்தின் அனுமதி கிடைக்காமையால் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதில் சட்டச் சிக்கல்கள் காணப்படுகின்றன. எனவே சட்டச் சிக்கல்கள்

11

## தேசபந்துவை பதவி நீக்கும் தீர்மானம் நிறைவேறியது

கொழும்பு, ஓக. 06

தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து நீக்குவதற்கான வாக்கெடுப்பில் அதற்கு ஆதரவாக 177 வாக்குகள் அளிக்கப்பட்டுள்ள நிலையில் அவரை பதவியிலிருந்து நீக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த வாக்கெடுப்பில் குறித்த பிரேரணைக்கு

11

## மன்னார் காற்றாலை மின் திட்டம் நாளை விசேட கலந்துரையாடல்

### ஜனாதிபதியும் பங்கேற்க வாய்ப்பு

கொழும்பு, ஓக. 06

மன்னாரில் இரண்டாம் கட்ட காற்றாலை மின் உற்பத்தி வேலைத்திட்டம் தொடர்பில் நாளை வியாழக்கிழமை பாராளுமன்ற வளாகத்தில் அமைச்சர்கள் தலைமையில் விசேட கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினரும் ரெலோ தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

11

# செம்மணி மனித புதைகுழி அகழ்வில் சர்வதேச பொறிமுறை மிக அவசியம்

### ஐ. நா. ஆணையாளருக்கு அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள் கடிதம்

03

## மேலும் 6 எலும்புக்கூட்டு தொகுதிகள் செம்மணியில் நேற்று அடையாளம்



யாழ்ப்பாணம், ஓக. 06

யாழ்ப்பாணம் செம்மணி பகுதியில் மனித புதைகுழிகளில் இருந்தும் நேற்று, புதிதாக 6 எலும்பு கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட மனித எலும்புக்கூட்டு தொகுதிகளில் 4 முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அதன் அடிப்படையில் கடந்த 16 நாட்களாக

11

## நாடளாவிய ரீதியில் இப்போது 39,267 ஆசிரியர் வெற்றிடங்கள்

### கல்வி பிரதியமைச்சர் தகவல்

கொழும்பு, ஓக. 06

நாடாளாவிய ரீதியில் 39267 ஆசிரியர் வெற்றிடங்கள் இருந்தும் தற்போது வரையில் பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்படவில்லை என்று கல்வி உயர்கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற வாய்மொழி மீதான விவாதங்களின் போது உரையாற்றுகையிலேயே அவர்

11

## பிரதி பாதுகாப்பு அமைச்சருக்கு எதிராக வருகின்றது பிரேரணை

கொழும்பு, ஓக. 06

பிரதி பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானத்தை பாராளுமன்றத்தில் முன்வைக்க ஐக்கிய மக்கள் சக்தி முடிவு செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

11

புதைகுழியில் எடுக்கப்பட்ட சான்றுகள்

## 200 பேர் பாரவையிட்டபோதும் அடையாளம் காட்டப்படவில்லை!

யாழ்ப்பாணம், ஓக. 06

செம்மணி மனித புதைகுழிகளில் இருந்து மீட்கப்பட்ட சான்று பொருட்களை சுமார் 200 பேர் வரையில் பார்வையிட்டிருந்தனர் என

11

## மீன்பிடி, விவசாயத்துறையில் பாதிக்கப்படும் வடக்கு மக்களுக்கு நிவாரணம் கிடைக்குமா?

### சபையில் சிறிதரன் எம். பி. கேள்வி

கொழும்பு, ஓக. 06

யாழ். மாவட்டத்திலுள்ள வலி. கிழக்கு, வலி. மேற்கு ஆகிய பிரதேசங்களில் பல பகுதிகளில் கடற்றொழில், விவசாயத் துறைகளில் பாதிக்கப்படும் மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படுமா? என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சி. சிறிதரன் எம். பி. கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற வாய்மொழி மீதான விவாதங்களின் போதே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

அவரின் கேள்விக்குப் பதிலளித்த வர்த்தக அமைச்சர், "விவசாயிகளின் அறுவடையை பாதுகாப்பதற்கும் அவர்களுக்கான நிதியைப் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுப்போம் என்றார். (அ)

## மனிதப் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட பொருட்களை அடையாளம் காண்பதில் பொதுமக்களின் ஒத்துழைப்பு

### உண்மை, நீதியை நோக்கிய நடவடிக்கை என ஐ. நா. பாராட்டு

கொழும்பு, ஓக. 06

செம்மணி மற்றும் கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழிகளில் இருந்து மீட்கப்பட்ட உடைமைகளை அடையாளம் காண்பதில் பொது மக்களின் உதவியை நாடுவதற்கான தீர்மானம் உண்மை, நீதி மற்றும் நல்லிணக்கத்தை நோக்கிய, நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்டதோர் நடவடிக்கை ஆகும் என இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

செம்மணி சித்துபாத்தி மற்றும்


11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலைக் குற்றவாளி சோமரத்னவுக்கு உயிராபத்து ஏற்படின் அரசே பொறுப்பு

## கஜேந்திரகுமார் எம்.பி. சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், ஓக. 06

**செம்மணி மனிதப் புதைகுழிக்கு வழக்கில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட சோமரத்ன ராஜபக்ஷவின் உயிருக்கு சிறையில் ஆபத்து ஏற்படுமானால் அரசாங்கமே முழுப்பொறுப்பேற்க வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் மக்களின் மனங்களில் அழியா இடம் பிடித்திருக்கின்ற செம்மணி மனிதப் புதைகுழி வழக்கில் ஏற்கனவே குற்றவாளியாக சோமரத்ன ராஜபக்ஷ சிறைத் தண்டனை அனுபவித்து வருகிறார்.

ஏற்கனவே அவர் செம்மணி பகுதியில் சுமார் 600 உடல்கள் வரை புதைக்கப்பட்டுள்ளதாக வாக்குமூலம் ஒன்று காணப்படுகிறது.

அவரின் மனைவி, செம்மணியில் சுமார் 300 பேரை தலையாட்டி மூலம் கொண்டுவரப்பட்டவர்கள் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டதாகவும் சிறையில் உள்ள தனது கணவர் கொல்வதற்கான உத்தரவுகளை பிறப்பித்த நபர்கள் தொடர்பில் சாட்சியமளிக்க தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி அநுரவுக்கு கடிதம் எழுதியதாக ஊடகங்களில் பார்த்தேன்.

எம்மை பொறுத்தவரை சோமரத்ன ராஜபக்ஷ ஒரு குற்றவாளி. குற்றவாளி சில விடயங்களை கூறப்போவதாக அவரது மனைவி கூறுகிறார்.

ஆகவே அவர் என்ன கூறப் போகிறார் என்பதை அறிய வேண்டும். அவர் சிறையில் உள்ள நிலையில் அவருக்கு ஏதாவது உயிர் ஆபத்துக்கள் ஏற்படும். ஆனால் அதற்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும்-என்றார். (அ-05)

# 79,917 அபாயகரமான வெடிபொருட்கள் முல்லைத்தீவு, கிளிநொச்சியில் அகற்றல்

## ஷார்ப் நிறுவன நடவடிக்கை முகாமையாளர்

முல்லைத்தீவு, ஓக. 06

வடக்கின் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில், 35 இலட்சத்து 3 ஆயிரத்து 666 சதுர மீற்றர் பரப்பளவில் இருந்து, 79 ஆயிரத்து 917 அபாயகரமான வெடி பொருட்களை அகற்றியுள்ளதாக ஷார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் பிரபாத் நாரம்பனவ தெரிவித்துள்ளார்.

வடக்கில், மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பணிகளை முன்னெடுத்து வரும் தன்னார்வ தொண்டு நிறுவனம், கடந்த மாதம் வரையான வெடிபொருள் அகற்றல் செயற்பாடுகள் தொடர்பில் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

முல்லைத்தீவின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள பகுதியிலும், கிளிநொச்சியின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள, முகமாலை, கிளாலி, இயக்கச்சி மற்றும் ஆனையிறவிலும், கண்டாவளை பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள தட்டுவன்கொட்டி பகுதியிலும், 35 இலட்சத்து 3 ஆயிரத்து 666 சதுர மீற்றர் பரப்பளவில் இருந்து, 79 ஆயிரத்து 917 ஆயிரத்து அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக, ஷார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் பிரபாத் நாரம்பனவ தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சியாக, கண்ணிவெடி அகற்றும் பணிகளை, புதுக்குடியிருப்பு அம்பகாமம், மாங்குளம், கொக்காவில், தட்டுவன்கொட்டி, கிளாலி மற்றும் ஆனையிறவிலும், துரித கதியில் முன்னெடுத்து வருவதாகவும், பிரபாத் நாரம்பனவ குறிப்பிட்டுள்ளார். (அ)

# ரூ.23 மில்லியன் பெறுமதியான கஞ்சா கட்டைக்காட்டில் சிக்கியது

யாழ்ப்பாணம், ஓக. 06

யாழ்ப்பாணம், கட்டைக்காடு பகுதியில் இலங்கை கடற்படை நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, சுமார் 102 கிலோ எடையுள்ள கேரள கஞ்சா மீட்கப்பட்டது.

இவற்றின் பெறுமதி 23 மில்லியன் ரூபாயைவிட அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, யாழ்ப்பாணம், கடைக்காடு பகுதியில் வடக்கு கடற்படை கட்டளையின் வெத்தலக்கேணி கடற்படை நிலையம் நேற்று முன்தினம் மாலை நடத்திய இந்த சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, அப்பகுதியில் உள்ள ஒரு புதரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகத்திற்கிடமான பொதிகள் அவதானிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டன.

அப்போது, பொதிகளில் அடைக்கப்பட்டிருந்த 102 கிலோ எடையுள்ள கேரள கஞ்சா கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

கைப்பற்றப்பட்ட கஞ்சா மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ)

# மன்னாரில் 2 ஆவது நாளாகவும் போராட்டம்

மன்னார், ஓக. 06

மன்னார் தீவு பகுதியில் புதிதாக இரண்டாம் கட்டம் அமைக்கப்படவுள்ள காற்றாலை மின் உற்பத்தி கோபுரங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், தற்போது மன்னார்-மதவாச்சி பிரதான வீதியூடாக கொண்டுவரும் காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பதற்கான பொருட்களை மன்னார் நகருக்குள் கொண்டு வருவதற்கும் எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நேற்றும் மன்னாரில் அமைதியான முறையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளாரின் ஏற்பாட்டில் நேற்று இரண்டாவது நாளாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்துக்கு பூரண ஆதரவை வழங்கும் வகையில் மன்னார் நகர பகுதியில் உள்ள ஒரு சில உணவகங்களை தவிர அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டன. மீனவர்கள் கடற்றொழிலுக்கு செல்லாது குறித்த போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

மன்னார் தீவுக்குள் இரண்டாம் கட்ட காற்றாலை திட்டங்களுக்கான மூலப் பொருட்கள் எதுவும் தீவு பகுதிக்கு கொண்டு வரக்கூடாது என்பதை கருத்தில் கொண்டு மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த அமைதி போராட்டத்தில் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார், அருட்தந்தையர்கள், பொது அமைப்புகள், சிவில் அமைப்புக்கள், மீனவ அமைப்புகள், வர்த்தகர்கள், பொதுமக்கள், இளைஞர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் என பலர் கலந்துகொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர். (அ)

# செம்மணி விடயத்தில் சாட்சியமளிக்க சோமரத்ன உடன்படுவார் எனில் அதற்கு அரசு உதவவேண்டும்

## வலியுறுத்துகிறார் சுமந்திரன்



யாழ்ப்பாணம், ஓக. 06

செம்மணி மனித புதைகுழி விடயம் தொடர்பாக சர்வதேச நீதிமன்றில் சாட்சியமளிக்க சோமரத்ன ராஜபக்ஷ உடன்படுவார் எனில் அதற்கு அரசாங்கம் வழி செய்து கொடுக்க வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் செம்மணி மனித புதைகுழியில் அகழ்வு இடம்பெறுவதை நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த மனித புதைகுழியில் இப்பொழுது 130 இற்கும் மேற்பட்ட எலும்புத் தொகுதிகள் கண்டெடுக்கப்பட்டு இருக்கின்றன. இவ்வாறு ஒவ்வொரு நாளும் இங்கு எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்படுகின்றன.

இதன் பின்னணியை நாங்கள் பார்ப்போமாக இருந்தால் 1999 ஆம் ஆண்டு சோமரத்ன ராஜபக்ஷ நீதிமன்றத்தில் சொன்ன கூற்றின் பிரகாரம் 15 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் கண்டெடுக்கபட்டுள்ளன.

அதைத் தொடர்ந்து தற்செயலாக கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூட்டினால் தொடரும் அகழ்வுப் பணியில் நூற்று கணக்கான எலும்புக் கூட்டு தொகுதிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கண்டெடுக்கப்படுகின்றவை அந்த வேளையில் சோமரத்ன ராஜபக்ஷ சொன்ன கருத்துகளுடன் ஒத்துப்போகிறன.

அவர் 300 தொடக்கம் 400 வரையான உடல்கள் புதைக்கப்பட்டது என்றும் அதில் இராணுவத்தின் உயர் அதிகாரிகள் பங்காளர்களாக இருந்திருக்கிறார்கள் என்றும் தெரிவித்திருந்தார்.

அவர் நீதிமன்றத்தில் தெரிவித்த விடயத்தின் உண்மைத் தன்மை 25 வருடங்களுக்குப் பின்னர் தற்போது வெளிப்படுகின்றது. பலருக்கு பலவிதமான சந்தேகங்கள் இருக்கின்றன. இது மூடி மறைக்கப்படும் அல்லது அப்பொழுது செம்மணியில் செய்துவிட்டு கைவிட்டது போல அப்படியே இதுவும் கைவிடப்படுமா அல்லது மன்னாரில் அல்லது கொக்குத்தொடுவாய் அல்லது மாத்தளையில் நடந்ததை போல இருக்குமா என்று பலவிதமான சந்தேகங்கள், கேள்விகள் பலருக்கு இருக்கின்றன.

ஆகையினால் தான் இதனை வெளிப்படைத் தன்மையோடு செய்ய வேண்டுமென்று நாங்கள் கேட்கிறோம்.

மக்களுக்கு இது சம்பந்தமாக ஒரு நம்பிக்கை ஏற்படுவதாக இருந்தால் நிச்சயமாக ஆரம்பத்தில் இருந்தே சர்வதேச மேற்பார்வை இருக்கவேண்டுமென நாங்கள் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டே இருக்கிறோம்.

இந்த அகழ்வுப் பணிகள் ஆரம்பித்த வேளையிலேயே நாங்கள் இது சம்பந்தமாக ஜனாதிபதிக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறோம். ஜனாதிபதிக்குத்தான் அந்த கடிதத்தை எழுத முடியும். ஏனென்றால் இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள்ளேயேதான் இது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஆகையினால் வெறுமனே இப்படியான நிபுணத்துவம் இல்லாத தரப்புகளை வைத்து இதனை செய்யாமல் முழுமையாக ஒரு சர்வதேச ஈடுபாட்டை இந்த வேளையிலே வருவிக்க வேண்டும் என்பது நாங்கள் தொடர்ச்சியாக சொல்லி வருகிற ஒரு விடயம். ஆகவே அதனை திரும்பவும் இப்போதும் வலியுறுத்துகிறேன்.

நேற்று முன்தினம் கூட செம்மணி தொடர்பில் சர்வதேச நீதிமன்றிலே சாட்சியமளிக்கத் தான் தயார் என சொன்னதாக செய்திகள் வெளிவந்துள்ளன. அந்தச் செய்தி உண்மையானால் அதற்கு வழி செய்து கொடுக்க வேண்டும்.

சர்வதேச மன்று ஒன்றிலே அவரை நிறுத்தி அவருடைய கூற்றுக்களைப் பெற்று அவர் சொல்லுவதில் ஒத்துப் போகிறதான இந்தத் தடயங்களை கண்டுபிடிக்கும் விடயங்கள் சரி பார்க்கப்பட வேண்டும். இது மட்டுமல்ல. இது ஒரு திருப்பு முனையான சம்பவமாக நாங்கள் கருதுகிறோம். வேண்டுமென்றே தமிழ் மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டதற்கு தற்கால சான்றுகள் இங்கே இருந்து ஆரம்பமாகிறது போலவும் தோன்றுகிறது.

ஆகவே இதற்கான சான்றுகளை சேகரிக்கிற பொறிமுறைகள் விசேடமாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையிலே தற்பொழுது ஒஸ்லெப் என்ற பொறிமுறை இருக்கிறது. அதாவது, சான்று பதிவு செய்வதும் பாதுகாப்பதுமான பொறிமுறை. அவை எல்லாம் வரவழைக்கப்பட்டு இங்கே நடந்த விடயங்கள் முழுமையாக வெளிப்படுத்தப்படவேண்டும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
06.08.2025 புதன்கிழமை
விசுவாவசு வருடம், ஆனி 13

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## மாகாண சபை விவகாரம்

மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியிருக்கின்றது. அத்துடன், அதன் மூலம் தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வை உறுதிப்படுத்துமாறும் வலியுறுத்தியிருக்கிறது. மறுபுறம், பிறிதோர் எதிரணியான ராஜபக்ஷக்களின் பொதுஜன பெரமுனவும் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் சர்வகட்சி மகாநாட்டைக் கூட்டுமாறு தெரிவித்திருக்கிறது. மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் அனைத்துத் தரப்புகளும் ஆர்வம் காண்பிப்பது நல்ல விடயம்தான் ஆனால், பேச வேண்டிய தமிழர் தரப்பு பேசாமல் இருப்பதற்கான காரணம் என்ன?

ரணில் - மைத்திரி ஆட்சிக்காலத்தில் மாகாண சபைத் தேர்தல் பிற்போடப்பட்டமைக்கு, அப்போது பிரதான எதிர்கட்சியாக இருந்த சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒரு பிரதான காரணம் என்னும் குற்றச்சாட்டு உண்டு. இதற்கு இதுவரையில் சம்பந்தப்பட்டவர்கள் பதிலளித்ததில்லை.

ஆனால், இப்போது விடயம் மாகாண சபை முறைமையை ஆரம்பத்தில் எதிர்த்து பின்னர் தங்களின் அரசியல் வளர்ச்சிக்காக மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டவர்களான ஜே. வி. பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி மாகாண சபைத் தேர்தலை தொடர்ந்தும் பிற்போடுமா, அல்லது தேவையான சட்டத் திருத்தங்களை மேற்கொண்டு தேர்தலை அடுத்த ஆண்டாவது நடத்துமா என்னும் கேள்வியுண்டு. தேவையான சட்டத் திருத்தங்களை மேற்கொள்ளாமல் தேர்தலை நடத்த முடியாது என்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்திருக்கிறார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 38 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால், அந்த ஒப்பந்தத்தின் விளைவாக இலங்கை அரசியல் அமைப்பில் உள்வாங்கப்பட்ட பதின்மூன்றாவது திருத்தச்சட்டம் இன்றுவரையில் பேசு பொருளாகவே தொடர்கிறது. அதனை முழுமையாக அமுல்படுத்தப்படும் விடயத்தில் அரசாங்கங்கள் எவையுமே வெற்றி பெறவில்லை. காரணம் கடும்போக்குவாத தரப்பினரின் அழுத்தங்கள் என்று ஒற்றைவரியில் கூறிவிட முடியாது. ஏனெனில், இலங்கை அரசியல் வரலாற்றில் கடும்போக்குவாத தரப்புகள் அனைத்தையும் எதிர்த்துக் கொண்டுதான் இருப்பர்.

ஆனால், தென்னிலங்கையில் சாதகமான அரசியல் சூழல் காணப்படும் போது, அதனை பயன்படுத்தி மாகாண சபை முறைமையை பலப்படுத்தும் - அதனை ஒரு தீர்வு நோக்கி அத்திபாரமாகக் கையாளுவதில் 1987இற்கு பின்னர், தமிழர் அரசியலை கையாண்ட தமிழ்த் தலைமைகள் உண்மையாகவும் நேர்மையாகவும் செயல்படவில்லை என்னும் உண்மை இருக்கிறது. விடுதலைப் புலிகள் இயக்கம் தனிநாடு கோரி ஆயுத வழிமுறையில் இயங்கிய காலத்தில், மிதவாத தலைமைகள் என்போர் விடுதலைப் புலிகளை காரணம் காண்பித்து ஒளிந்து கொண்டனர். உண்மையில் அவர்கள் சாத்தியமான வழிகளில் அரசியலைக் கையாண்டிருக்க வேண்டும். ஆனால், அவர்கள் அதனை முன்னெடுக்கவில்லை.

போர் தோல்விக்கு பின்னர் சாத்தியமான வழிகளை ஆராய்ந்து செயல்பட்டிருக்க வேண்டும் - அதற்கான முயற்சிகளில் ஈடுபடாது, தங்களின் ஆற்றலை மதிப்பிடாமல் தொடர்ந்தும் தவறான அரசியல் நகர்வுகளிலேயே தங்களின் நேரத்தைச் செலவிட்டனர். 2015இற்கு பின்னர் கிடைத்த சந்தர்ப்பத்தை முறையாக பயன்படுத்தியிருந்தால் சில முன்னேற்றங்களை கண்டிருக்கலாம்.

தற்போதுள்ள சூழலில் புதிய அரசியல் யாப்புக் கதைகளை விட்டுவிட்டு, மாகாண சபைத் தேர்தலுக்கான விடயங்களை ஒரு ஜனநாயகக் கோரிக்கையாக முன்னெடுக்க வேண்டும். பாராளுமன்றத்தில் ஒரு தனிநபர் பிரேரணையை கொண்டுவருவதுடன் விடயம் முடிந்துவிடவில்லை. பாராளுமன்றத்திற்கு வெளியில் செயலாற்ற வேண்டும். பாராளுமன்றத்தில் பேசுவதால் - பிரேரணைகளைக் கொண்டுவருவதால் விடயங்களை முன்னெடுக்க முடியுமென்றால் பல பிரச்னைகள் எப்போது தீர்ந்திருக்க வேண்டும் அல்லவா! இனியும் மக்களை திசைதிருப்பும் - தவறான நம்பிக்கைகளை கொடுக்கும் வகையில் செயல்படுவதை விடுத்து, சாத்தியமானவற்றைக் கையாள முயற்சியுங்கள்.

# செம்மணி மனித புதைகுழி அகழ்வில் சர்வதேச பொறிமுறை மிக அவசியம்

### ஐ.நா. ஆணையாளருக்கு அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள் கடிதம்

*யாழ்ப்பாணம், ஓக. 06*

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் உரிய சர்வதேச நியமங்களுக்கு அமைவாக முன்னெடுக்கப்படுவதையும், அங்கு கண்டறியப்படும் மனித எச்சங்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கு ஏதுவான வகையில் அகழ்வுப் பணிகளின் போது சர்வதேச கண்காணிப்பு மற்றும் தொழில்நுட்ப உதவிகள் என்பன வழங்கப்பட வேண்டும். அதன்படி வட, கிழக்கு மாகாணங்களில் உள்ள மனிதப்புதைகுழிகளை மீள் அடையாளப் படுத்துவற்கும், முறையான கண்காணிப்பை உறுதி செய்வதற்கான சர்வதேசப் பொறிமுறையொன்றை நடைமுறைப்படுத்துவதற்கும் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் அதிமுன்னுரிமை வழங்கவேண்டும் என வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இயங்கி வரும் தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் இணைந்து ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளருக்கும், மனித உரிமைகள் பேரவையின் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியப் பேரவையின் கூட்டணியிலுள்ள கட்சிகளின் தலைவர்கள், மதத்தலைவர்கள் 11 பேரும், 115 சிவில் சமூக அமைப்புகளும் ஒப்பமிட்டுள்ள அந்தக் கடிதத்தில் கூறப்பட்டவை வருமாறு,

இலங்கையில் இடம்பெற்ற இனவழிப்பு, போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான வலுவான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கோரியும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை மற்றும் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் என்பன இலங்கை விவகாரத்தை ஐக்கிய நாடுகள் பொதுச்சபை, ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் என்பவற்றுக்குக் கொண்டுசெல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கோரியும் தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட தமிழ்ப்பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் இணைந்து 2021 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் திகதி ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் 47 நாடுகளின் பிரதிநிதிகளுக்கு அனுப்பிவைத்திருந்த கடிதம் தொடர்பில் மீண்டும் நினைவுபடுத்துகிறோம்.

இலங்கையில் 2009 ஆம் ஆண்டு மேமாதம் நடைபெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின்போதும், அதன் பின்னர் இலங்கையில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதிலும் ஐக்கிய நாடுகள் சபை அடைந்த தோல்வியானது, இப்போது உலகளாவிய ரீதியில் எதேச்சதிகாரப்போக்கிலான பல நாடுகளின் அரசாங்கங்கள் தண்டனையிலிருந்து விடுபட்டு, மிகமோசமான குற்றங்களில் ஈடுபடுவதற்கு வாய்ப்பாக அமைந்திருக்கிறது.


இவ்வாறானதொரு பின்னணியில் உங்களிடம் நாம் சில விடயங்களை வலியுறுத்த விரும்புகிறோம். அதன்படி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடரின் போது, இலங்கையில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு கடந்த 16 ஆண்டுகளில் பொறுப்புக்கூறல் செயன்முறையில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் எட்டப்படவில்லை என்ற விடயத்தை ஐ.நா பொதுச்சபை, ஐ.நா செயலாளர் நாயகம் மற்றும் ஐ.நா பாதுகாப்பு சபை ஆகிய கட்டமைப்புக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனக்கோரி உறுப்புநாடுகளால் தீர்மானமொன்று நிறைவேற்றப்படவேண்டும்.

அதேபோன்று உள்ளகப்பொறிமுறையை ஸ்தாபிப்பதற்கான வாய்ப்பையும் நேரத்தையும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கக்கூடிய எந்தவொரு உள்ளடக்கத்தையும் நாம் முழுமையாக நிராகரிக்கிறோம். குறிப்பாக "சுயாதீன குற்றப்பத்திர அல்லது சட்டவாதி அலுவலகத்தை" ஸ்தாபிப்பதே இலங்கையின் உள்ளகப் பொறுப்புக்கூறல் பொறிமுறையை நோக்கிய நகர்வாக அமையும் என சிலர் முன்மொழிந்துள்ளனர். இருப்பினும் இலங்கையின் அரச கட்டமைப்பில் ஆழமாக வேரூன்றியிருக்கும் பொறுப்புக்கூறல் செயன்முறையை நிறுவுவதற்கான தன்முனைப்பற்ற நிலையைக் கையாள்வதற்கு சுயாதீன குற்றப்பத்திர அலுவலகத்தை நிறுவுவது மாத்திரம் போதுமானதன்று.

அதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலக அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்டுவரும் "இலங்கை பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தின்" நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவை என்பதுடன் அதற்கு வழங்கப்பட்டுள்ள ஆணையை மேலும் காலநீடிப்பு செய்வதில் எமக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை. இருப்பினும் அக்காலநீடிப்பானது குறித்து வரையறுக்கப்பட்ட காலப்பகுதிக்கானதாகவும், இலங்கையை ஐ.நா பொதுச்சபை, ஐ.நா பாதுகாப்புச் சபை மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஆகிய கட்டமைப்கள் முன்னிலையில் பாரப்படுத்தவேண்டும் என்ற விடயத்தை உள்ளடக்கியதாகவும் அமையவேண்டும்.

தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் செம்மணி மனிதப்புதைகுழி அகழ்வுப்பணிகள் உரிய சர்வதேச நியமங்களுக்கு அமைவாக முன்னெடுக்கப்படுவதையும், அங்கு கண்டறியப்படும் மனித எச்சங்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கு ஏதுவான வகையில் அகழ்வுப்பணிகளின்போது சர்வதேச கண்காணிப்பு மற்றும் தொழில்நுட்ப உதவிகள் என்பன வழங்கப்படவேண்டும். வட, கிழக்கு மாகாணங்களில் உள்ள மனிதப்புதைகுழிகளை மீள் அடையாளப்படுத்துவற்கும், முறையான கண்காணிப்பை உறுதிசெய்வதற்கான சர்வதேசப் பொறிமுறையொன்றை நடைமுறைப்படுத்துவதற்கும் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் அதிமுன்னுரிமை வழங்கவேண்டும்-என்றுள்ளது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### மேடம்
எதிர்காலம் பற்றிய வீண் டென்ஷன் வந்து செல்லும். முக்கிய கோப்புகளை கையாளும் போது அலட்சியம் வேண்டாம். சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக்கூடும். கவனம் தேவைப்படும் நாள்.

### இடபம்
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். மதிப்பு கூடும்.

### மிதுனம்
உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். விஐபிகள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள்.

### கடகம்
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் பழைய சிக்கல்கள் தீரும். புத்துணர்ச்சி பெருகும்.

### சிம்மம்
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும். வேலைச்சுமை மிகுந்த நாள்.

### கன்னி
ஆடை ஆபரணம் சேரும். பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

### துலாம்
அரசால் அனுகூலம் உண்டு. மற்றவர்களால் பயனடைவீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள்.

### விருச்சிகம்
உங்களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரிய வரும். நட்பால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும்.

### தனுசு
திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி முடியும். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உத்தியோகத்தில் ஆதரிப்பார்கள். உழைப்பால் உயரும் நாள்.

### மகரம்
அரசால் ஆதாயம் உண்டு. துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை விற்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார்.

### கும்பம்
குடும்பத்தில் இருந்து வந்த பிரச்னைகள் விலகும். குடும்பத்தில் அமைதி திரும்பும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். உடல் நலம் சீராகும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள்.


### மீனம்
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தோல்வி மனப்பான்மையால் மன இறுக்கம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும். விட்டுக் கொடுத்துப் போக வேண்டிய நாள்.

# விசேட நடமாடும் சேவையை மக்களுக்கு பயனுறுதி வாய்ந்த வகையில் வழங்குக

## யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 06

விசேட நடமாடும் சேவை தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போது கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர் கூறுகையில், ஜனாதிபதி செயலகத்தின் கிளீன் சிறீலங்கா செயல்திட்டத்துக்கமைய, "இதயபூர்வமான யாழ்ப்பாணத்துக்கு - ஒற்றுமையின் தூய்மையான நெடும்பயணம்" எனும் கருப்பொருளிலான நடமாடும் சேவை எதிர்வரும் 14 ஆம் திகதி பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பருத்தித்துறை, கரவெட்டி மற்றும் மருதங் கேணி ஆகிய பிரதேச செயலாளர்கள் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும் 15 ஆம் திகதி உடுவில், தெல்லிப்பழை மற்றும் சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலாளர்கள் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் உடுவில் பிரதேச செயலகத்திலும் நடைபெறவுள்ளது. இந்த நடமாடும் சேவைக்கான முன்னாயத்த ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக நாம் நேரடியாக பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்துக்கும் உடுவில் பிரதேச செயலகத்துக்கும் சென்று கள ஆய்வுகளை மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்கியதாகவும் தெரிவித்தார். மேலும் கொழும்பிலிருந்து 13 ஆம் திகதி ரயில் மூலம் அதிகாரிகள் வருகை தரவுள்ளதாகவும் ஜனாதிபதி செயலகம், வடக்கு மாகாண சபை, மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் என்பன இணைந்து இந்த நடமாடும் சேவையை ஒழுங்குபடுத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.



மேலும் மக்கள் பயன்பெறும் வகையில் இந்த நடமாடும் சேவையை வினைத்திறனாக நடத்தி முடிப்பதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக் கொண் டார்.

இந்தக் கலந்துரையாடலில் பொதுமக்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகள், மண்டப ஒழுங்குகள், குடிநீர் வசதிகள், நடமாடும் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ள ஆளணிகளின் எண்ணிக்கைகள் உள்ளிட்ட பல விடயங்கள் அரசாங்க அதிபரால் விரிவாக ஆராயப்பட்டு பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

நடமாடும் சேவையில் ஆட்பதிவுச் சேவை, பிறப்பு இறப்புச் சான்றிதழ் வழங்கும் சேவைகள், ஓய்வூதியச் சேவைகள், வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சேவைகள், மோட்டார் வாகனப் பதிவுகள், கம்பனிப் பதிவுகள், சுகாதார சேவைகள், ஏற்றுமதிக்கான வாய்ப்புகள், வடக்கு மாகாணத்தின் சகல அமைச்சுக்குரிய சேவைகள், பிரதேச செயலகம் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய சேவைகள் உள்ளிட்ட சேவைகள் நடைபெறவுள்ளன. (எ)

# இந்தியாவிலிருந்து மீளத்திரும்பியவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் உதவித் தொகை வழங்கல்

யாழ்ப்பாணம், ஒக. 06

இந்தியாவிலிருந்து மீளத் திரும்பியவர்களின் சுமூகமான மீள் ஒருங்கிணைப்பிற்கான உதவித் தொகையானது யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனால் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) பா. ஜெயகரன், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் ந. தயாபரன், அபிவிருத்தி உத்தியோகத்தர் வைலட் நிக்லஸ் மற்றும் உதவித் திட்ட இணைப்பாளர் இ. பிரபா கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது இந்தியாவிலிருந்து மீளத் திரும்பியவர்களுடன் அவர்களின் வாழ்வாதாரம் மற்றும் கல்வி தொடர்பாகவும் அரசாங்க அதிபர் கேட்டறிந்து கொண்டார்.

உதவித்தொகையாக தலா ஒருவருக்கு 90, 000 ரூபாய் வீதம் சண்டிலிப்பாய் மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் மீளத் திரும்பிய 02 குடும்பங்களைச் சேர்ந்த ஐந்து பேருக்குமாக 450, 000 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட்டது. (எ)

# வவுனியாவில் பேருந்தில் கொண்டுவந்த பெருந்தொகை மாட்டிறைச்சி பறிமுதல்

வவுனியா, ஒக. 06

வவுனியாவுக்கு சட்டவிரோதமாக கொண்டு செல்லப்பட்ட 558 கிலோ கிராம் நிறையுடைய மாட்டிறைச்சி மாநகர சபையினரால் நேற்று முன்தினம் பறிமுதல் செய்யப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

நேற்று முன்தினம் மாலை கிளிநொச்சியில் இருந்து வவுனியா நோக்கிப்பயணித்த தனியார் பேருந்தில் சுகாதார சீர்கேடான முறையில் பெருந்தொகை மாட்டிறைச்சி கொண்டு செல்லப்பட்டது.

இந்த நிலையில், வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் வைத்து பேருந்தில் இருந்து இறக்கப்பட்டு மீண்டும் ஓட்டோவில் ஏற்றிச்செல்லப்படவிருந்தது.

இது தொடர்பில் வவுனியா மாநகர சபைக்கு பொதுமக்களால் முறைப்பாடு வழங்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு வந்த மாநகர சபையின் பிரதி முதல்வர் மற்றும் சபை உறுப்பினர் ஆகியோர் குறித்த செயல்பாட்டை தடுத்து நிறுத்தியதுடன் இறைச்சியை பறிமுதல் செய்தனர்.

மீட்கப்பட்ட இறைச்சியின் நிறை 558 கிலோ என தெரிவிக்கப்படுகின்றது.

சுகாதார பரிசோதகரின் மேற்பார்வையில் நிறை பார்க்கப்பட்டு மாநகர சபையில் களஞ்சியப்படுத் தப்பட்டுள்ளது.

இறைச்சியை கொண்டுவந்த நபர்கள் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-10)

# நீர்வேலியில் சுக்கிர வார சிறப்புச்சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக. 06

யாழ்ப்பாணம், நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத் தொடர் 33 ஆவது சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 08 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 05.30 மணிக்கு ஆரம்பமாகும். கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது. கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவசிறீ இராஜேந்திர சுவாமிநாதக் குருக்களின் ஆசியுரையை தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதன் நிகழ்த்துவார். சிறப்புச்சொற்பொழிவை இளஞ்சைவப்புலவர் ச. நவநீதன் "வரம் பெறு படலம்" என்னும் தலைப்பில் ஆற்றுவார்.

நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# துறைமுகங்களில் தேங்கி நிற்கும் 2,000க்கும் மேற்பட்ட வாகனங்கள்!

## மீண்டும் விலை அதிகரிப்புக்கான சாத்தியம்

கொழும்பு, ஒக. 06

**புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட 2,000க்கும் மேற்பட்ட வாகனங்கள் இரண்டு மாதங்களுக்கும் மேலாக கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகங்களில் தேங்கி நிற்கின்றன.**

இதனால், மேலதிக வாகனங்களை இறக்குவதில் கடுமையான சவால்கள் ஏற்பட்டுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வந்த புதிய வாகனத் தொகுதியை ஏற்றிச் சென்ற கப்பல், தேக்கநிலை காரணமாக இடம் இல்லாததால் பல நாட்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

சுங்க வட்டாரங்களின்படி, மூன்றாம் தரப்பு நாடுகள் மூலம் திறக்கப்பட்ட வங்கிக் கடன் கடிதங்களைப் பயன்படுத்தி இறக்குமதி செய்யப்பட்ட ஜப்பானிய வாகனங்கள் விடுவிக்கப்படாததால், இவற்றில் 1,000 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

மே 27 அன்று எழுந்த இந்தப் பிரச்னை தீர்க்கப்படாமல் உள்ளது. இதனால் அரசாங்கம் தெளிவான கொள்கை பதிலை வழங்கத் தவறியதால் பல இறக்குமதியாளர்கள் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த வாகனங்களுக்கான தாமதக் கட்டணங்கள் தற்போது நிடிக்க முடியாத அளவை எட்டியுள்ளதாகவும் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒரு வாகனத்துக்கான கட்டணம் ரூ. 500,000 வரை அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

திரட்டப்பட்ட தாமதக் கட்டணங்கள் மொத்த இறக்குமதிச் செலவுகளுடன் சேர்க்கப்படும் என்றும், இதனால் வாகனங்கள் வெளியிடப்பட்டவுடன் உள்ளூர் சந்தையில் வாகன விலைகள் குறிப்பிடத்தக்க அளவில் உயரக்கூடும் என்றும் வாகன இறக்குமதியாளர்கள் எச்சரிக்கின்றனர். (அ)

# இலங்கையின் மிகப்பெரிய யானைக்கு உயிர் ஆபத்து!

கொழும்பு, ஒக. 06

இலங்கையின் மிகப்பெரிய யானை என்று கருதப்படும் 'கவன்திஸ்ஸ'வின் உயிருக்குக் கடுமையான அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மிகவும் கம்பீரமான காட்டு யானையாக இருந்த "சியம்பலங்கமுவ யானை"யின் மரணத்தைத் தொடர்ந்து, 2012 இல் "கவன்திஸ்ஸ" பெரிய யானையாகப் பெயரிடப்பட்டது.

இருப்பினும், மனித நடவடிக்கைகள் காரணமாக, கலேவெல பகுதியிலிருந்து கல்கமுவ, தப்போவ மற்றும் வில்பத்து வழியாக கவன்திஸ்ஸவின் பாரம்பரிய வருடாந்த இடம்பெயர்வு பாதை இப்போது முற்றிலும் அணுக முடியாதாகிவிட்டது.

அத்துடன் யானையின் வாழ்விடத்தின் ஒரு பகுதியாக இருந்த பாலுகடவல, மகாகல் கமுவ மற்றும் இகினிமிட்டிய போன்ற நீர்நிலைகள், மனிதர்களால் அதிகளவில் அழிக்கப்பட்டு வருகின்றன.

இதன் விளைவாக, கவன்திஸ்ஸ இப்போது அதன் இயற்கையான வாழ்விடத்தின் பெரும்பகுதியை இழந்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

இதன் காரணமாக கவன்திஸ்ஸ கல்கமுவ மற்றும் அம்பன்பொல பகுதிகளில் சுற்றித் திரிவதாகச் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர் இதற்கிடையில், கவன்திஸ்ஸவின் உடலின் இடது பக்கத்தில் பல காயங்கள் இருப்பதைச் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கவனித்துள்ளனர்.

அவை சமீபத்திய துப்பாக்கிச் சூட்டுக் காயங்களாக இருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

அத்துடன் கவன்திஸ்ஸ தலைமையிலான கூட்டத்தைச் சேர்ந்த பல யானைகளும் கால்களில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் நடமாடுகின்றன.

கால்நடை மருத்துவர்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் கூற்றுப்படி, கவன்திஸ்ஸ என்ற யானையின் உயிருக்குக் கடுமையான அச்சுறுத்தல் உள்ளமையை வெளிப்படுத்துகிறது.

# புதுமணத் தம்பதிகளுக்கு அரசிடம் இருந்து வீடுகள்

கொழும்பு, ஒக. 06

இலங்கையில் புதுமணத் தம்பதிகளுக்கு வீடு வழங்கும் திட்டம் அரசாங்கத்தால் செயற்படுத்தப்பட்டு வருவதாக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

அனுராதபுரத்தில் நடைபெற்ற விழா ஒன்றில் பங்குபற்றி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

திருமணத்திற்குப் பின்னர் தங்கள் சொந்த வீட்டில் வாழ விரும்பும் இளம் தலைமுறையினரின் கனவை இந்த திட்டம் நிறைவேற்றும் என அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் உள்ள வீட்டு வசதி பிரச்னையைத் தீர்க்கும் நோக்கில் அடுத்த ஐந்து முதல் பத்து ஆண்டுகளுக்குள் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வரும் எனவும் அவர் கூறினார். (அ)

# எம்.பிக்களின் காப்பீடு குறைப்பு!

கொழும்பு, ஒக. 06

பாராளுமன்ற உறுப்பினர்களின் காப்பீட்டுத் தொகையைக் குறைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தற்போது ஒரு மில்லியன் ரூபாய் காப்பீட்டுத் தொகையாக வழங்கப்படுகிறது.

அதனை 250,000 ரூபாயாக குறைப்பதற்கு பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (அ)

# இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவில் சாமர சம்பத் தசநாயக்க முறையீடு

கொழும்பு, ஒக. 06



பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க, இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுவில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளார்.

2024 ஆம் ஆண்டில் உப பொலிஸ் பரிசோதகர்களுக்கான ஆட்சேர்ப்பு செய்ததில் நடந்ததாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பாக இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முன்னதாக, பொலிஸ் அதிகாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான வர்த்தமானி அறிவிப்பு 2024 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

அந்த வர்த்தமானியின்படி, நடத்தப்பட்ட திறனாய்வுத் தேர்வுகளைத் தொடர்ந்து, 2024 ஆம் ஆண்டுநவம்பரில் தகுதியான 100 பேருக்கு நியமனங்கள் திட்டமிடப்பட்டன.

இருப்பினும், இந்த திட்டமிடப்பட்ட நியமனங்கள் குறித்த 100 பேருக்கும் வழங்கப்படவில்லை.

பதிலாக, அரசாங்கம் தற்போது வர்த்தமானியை மீண்டும் வெளியிட்டு புதிய ஆட்சேர்ப்புகளை வழங்கத் தயாராகி வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

இந்த நிலைமை சாத்தியமான ஊழலை சுட்டிக்காட்டுவதாக குறிப்பிட்டுள்ள சாமர சம்பத் தசநாயக்க, பொலிஸ்துறைக்குப் பொறுப்பான அமைச்சர் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக, தாம் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளதாக கூறியுள்ளார். (அ)

# அமெ. வரிகளை மேலும் குறைக்க பேச்சுவார்த்தை தொடர்கின்றது!

## இலங்கைத் தூதுவர் மகிந்த சமரசிங்க

கொழும்பு, ஒக. 06

இலங்கை ஏற்றுமதிகள் மீதான அமெரிக்க வரிகளை மேலும் குறைப்பதற்கான இராஜதந்திர பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

வட அமெரிக்காவின் தலைமை சங்கநாயகரும் மேரிலாந்து சர்வதேச பௌத்த விகாரையின் விஹாராதிபதியுமான கட்டுகஸ்தொட்ட உபரதன நாயக்க தேரரை சந்தித்தபோது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் கட்டணச் சலுகைகளின் தற்போதைய நிலை குறித்து தூதுவர் தேரருக்கு விளக்கினார்

அத்துடன், அமெரிக்காவுடனான பொருளாதார உறவுகளை வலுப்படுத்த இலங்கை அரசாங்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் அவர் எடுத்துரைத்தார்.

தொடர்ச்சியான இராஜதந்திர ஈடுபாட்டின் மூலம் ஏற்றுமதிச் செலவுகளைக் குறைப்பதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்துக்கு அது சாதகமாக பங்களிக்கும் என்று அவர் கூறினார். (அ)

# விவசாயிகளுக்கு நட்ட ஈடு வழங்கப்படும்

கொழும்பு, ஒக. 06

விவசாயிகளுக்கான நட்ட ஈடு வழங்கப்படவுள்ளதாக வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார். (அ)

# ரயிலில் சிசுவின் சடலம் விசாரணைக்கு உத்தரவு

கொழும்பு, ஒக. 06

கொழும்பு, மாளிகாவத்தை ரயில் முனையத்தில் நிறுத்தப்பட்டிருந்த ரயில் கழிப்பறையிலிருந்து சிசுவொன்றின் உடலம் கண்டெடுக்கப்பட்டமை தொடர்பாக மகளிர் விவகாரம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜினால் அறிக்கை கோரப்பட்டுள்ளது.

தெமட்டகொடை பொலிஸ் நிலைய சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் இந்த விவகாரம் குறித்து தற்சமயம் விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது.

புத்தளத்தில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த குறித்த ரயிலின் கழிப்பறையில் இருந்து கடந்த வாரம் தூய்மைப் பணியாளர் ஒருவரால் சிசுவின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்நிலையில் புத்தளம் முதல் கொழும்பு - கோட்டை வரையிலான அனைத்து ரயில் நிலையங்களில் இருந்தும் சிசிரிவி காட்சிகளைத் விசாரணைக்காக கோரியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# அமைச்சர் விஜித ஹேரத்தின் பேச்சுக்கும் மத்திய வங்கி தரவுக்கும் இடையே முரண்!

கொழும்பு, ஒக. 06

இலங்கையின் சுற்றுலா வருவாயின் இந்த ஆண்டு வருமானம் குறித்த அதிகாரபூர்வ புள்ளிவிவரங்களுக்கும் அரசாங்க அறிக்கைகளுக்கும் இடையிலான முரண்பாடு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

நுவரெலியா சீதையம்மன் ஆலயத்தின் புதிய தியான மண்டப திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், ஆண்டின் முதல் 7 மாதங்களில் சுற்றுலா மூலம் 3.7 பில்லியன் அமெரிக்க டொலர்கள்ஈட்டப்பட்டுள்ளதாக கூறினார்.

2025 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் இதேபோன்ற சுற்றுலா பயணிகளின் வருகை எதிர்பார்க்கப்படுகிறது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இருப்பினும், இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட புள்ளி விவரங்கள் முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது.

அதன் சமீபத்திய அறிக்கையின்படி, இந்த ஆண்டில் முதல் ஆறு மாதங்களில் சுற்றுலா வருவாய் 1.71 பில்லியன் அமெரிக்க டொலர்களாக காட்டப்படுகிறது.

இது கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 1.56 பில்லியன் அமெரிக்க டொலர்களிலிருந்து 10 வீத அதிகரிப்பு என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த தொகையானது அமைச்சர் மேற்கோள் காட்டிய தொகையில் பாதிக்கும் குறைவானதாகும்.

எனவே, இந்த முரண்பாடு அமைச்சரின் அறிக்கையின் துல்லியம் குறித்த கவலைகளை எழுப்பியுள்ளது.

இது திட்டமிடப்பட்ட வருவாய், உண்மையான வருவாயாக தவறாக வழங்கப்பட்டதா என்ற ஊகங்களைத் தூண்டியுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க வாகனங்களை வரி இல்லாமல் இறக்குமதி செய்க!

## இலங்கையிடம் வொஷிங்டன் கோரிக்கை

கொழும்பு, ஒக. 06

**வர்த்தக இடைவெளியைக் குறைக்கும் முயற்சியில், மின்சார வாகனங்கள் உள்ளிட்ட அமெரிக்க வாகனங்களுக்கு வரியில்லா அணுகலை வழங்குமாறு அமெரிக்கா, அதன் கட்டணப் பேச்சுவார்த்தைகளில் இலங்கையைக் கோரியதாக தெரியவந்துள்ளது.**

இருப்பினும், இலங்கை அரசாங்கம் அதற்கு முழுமையான ஒப்புதலை வழங்கவில்லை. ஆனால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் இது போன்ற கோரிக்கைகளை படிப்படியாகக் கருத்தில் கொள்ள ஒப்புக்கொண்டது.

மேலும், கட்டணங்களைக் குறைக்கும் நோக்கத்துடன் இலங்கையும் அமெரிக்காவும் வர்த்தகப் பேச்சுவார்த்தையைத் தொடரும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைய சுற்று பேச்சுவார்த்தைகளின்போது, இலங்கை முதலில் முன்மொழியப்பட்ட 44 சதவீத வரிகளிலிருந்து 20 சதவீதமாகக் குறைக்க முடிந்தது.

தற்போதைய விகிதம் அதன் பிராந்திய போட்டியாளர்களான பங்களாதேஷ் மற்றும் வியட்நாம் போன்றவற்றுடன் இணையாக இருப்பதால் போட்டித்தன்மை வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

வியட்நாம் மற்றும் பங்களாதேஷ் மீது விதிக்கப்பட்ட வரிகளும் 20 சதவீதமாகவே உள்ளன.

இலங்கையுடனான அமெரிக்காவின் மொத்த பொருட்கள் வர்த்தகம் 2024 இல் 3.4 பில்லியன் டொலர்களாக மதிப்பிடப்பட்டுள்ளது.

2024 இல் இலங்கைக்கான அமெரிக்க பொருட்களின் ஏற்றுமதி 368.2 மில்லியன் டொலர்களாக இருந்தது, இது 2023 ஐ விட 4.9 சதவீதம் அதிகமாகும்.

இலங்கையிலிருந்து அமெரிக்க பொருட்களின் இறக்குமதி 2024 இல் மொத்தம் 3.0 பில்லியன் டொலர்களாக இருந்தது, இது 2023 ஐ விட 6.1 சதவீதம் அதிகமாகும்.

இலங்கையுடனான அமெரிக்க பொருட்களின் வர்த்தக பற்றாக்குறை 2024 இல் 2.6 பில்லியன் டொலர்களாக இருந்தது, இது 2023 ஐ விட 6.3 சதவீதம் அதிகமாகும்.

வர்த்தக இடைவெளியைக் குறைப்பதற்கான அதன் திட்டங்களில் ஒன்றாக, விலைகள் போட்டித்தன்மையுடன் இருந்தால் அமெரிக்க நிறுவனங்களிடமிருந்து எரிபொருளை வாங்க இலங்கை முன்வந்துள்ளது.

தற்போது, அமெரிக்க சந்தையை அடையும் மிகப்பெரிய இலங்கை தயாரிப்புகளில் ஆடைகள் உள்ளன.

சீனாவிலிருந்து ஆடைத் தொழிலுக்கு மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கு கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும் என்ற அவர்களின் கோரிக்கையை இலங்கை உறுதியாக எதிர்த்தது. (அ)

## 3 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட படை விட்டோடிகள் கைதாகினர்!

கொழும்பு, ஒக. 06

சட்டவிரோதமாக சேவையை விட்டு வெளியேறிய 3,500 இற்கும் மேற்பட்ட ஆயுதப்படை உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பெப்ரவரி 22 முதல் ஒகஸ்ட் 3 வரை மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையில், சேவையிலிருந்து தப்பியோடிய 3,504 முப்படை வீரர்கள் கைது செய்யப்பட்டதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் 2,937 பேர் இராணுவ வீரர்கள்.

மேலும், 289 கடற்படை வீரர்களும், 278 விமானப்படை வீரர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.




முப்படைகளில் இருந்து சட்டபூர்வமாக இராஜினாமா செய்யாத வீரர்கள் இராணுவத்தில் சரணடைவதற்காக கடந்த ஆண்டு பொது மன்னிப்புக் காலம் அறிவிக்கப்பட்டது.

மேலும் அந்தக் காலகட்டத்தில் சரணடையாதவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் பெப்ரவரி 22 ஆம் திகதி முதல் நடந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## வெளிநாட்டு மது போத்தல்களுடன் இருவர் கைது!

கொழும்பு, ஒக. 06

கட்டுநாயக்க பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அடியம்பலம பகுதியில் பொலிஸார் முன்னெடுத்த சோதனையின்போது 30 வெளிநாட்டு மதுபான போத்தல்களுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது சந்தேக நபர்களிடமிருந்து வேறு நபர்களுக்குச் சொந்தமான 35 கடவுச்சீட்டுகளும் மீட்கப்பட்டுள்ளன.

கைதான சந்தேக நபர்கள் 22 மற்றும் 32 வயதுக்கு மேற்பட்ட வத்தளை மற்றும் ஹலதுமுல்ல பகுதிகளில் வசிப்பவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

## ஈஸி காஷ் மூலம் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட மூவர் கைது!

கொழும்பு, ஒக. 06

ஈஸி காஷ் முறையைப் பயன்படுத்தி ஐஸ் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட 'தெபுவன பிந்து' உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெபுவன, ஹொரண, மதுகம மற்றும் அங்குருவாத்தோட்டை பகுதிகளில் இவ்வாறு ஐஸ் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட 'தெபுவன பிந்து' உள்ளிட்ட மூவர் தெபுவன பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது, தெல்கொட விகாரைக்கு அருகில் 15 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைவாவே தெல்கொட விகாரைக்கு அருகில் வைத்து தெபுவன பிந்து 15 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மதுகம நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டதை தொடர்ந்து, 'தெபுவன பிந்து'வை ஏழு நாட்கள் தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்ள தெபுவன பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்கொள்ளப்பட்ட விசாரணையைத் தொடர்ந்து, தெபுவனவின் கிரிமெட்டிய பகுதியில் வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் சுமார் ஐந்து மில்லியன் ரூபாய் மதிப்புள்ள 310 கிராம் ஐஸ் போதைப்பொருளை பொலிஸார் ... (அ)

## இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் பொலிஸ் பொறுப்பதிகாரி கைது!

கொழும்பு, ஒக. 06

லொறி ஒன்றில் இருந்து 10,000 ரூபாய் இலஞ்சமாகப் பெற்ற குற்றச்சாட்டில் கீர்த்தி பண்டாரபுர போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பதிகாரி இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

லொறி ஒன்றில் இருந்து 10,000 ரூபாய் இலஞ்சமாகப் பெற்றபோது, குறித்த பொறுப்பதிகாரி இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழு அதிகாரிகளால் நேற்று மதியம் கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வலப்பனை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (அ)

## பொலிஸ் அதிகாரிகள் பலருக்கு இடமாற்றம்!

கொழும்பு, ஒக. 06

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஒப்புதலுடன், சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் பலர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சேவைத் தேவைகளின் அடிப்படையில் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய இந்த இடமாற்றங்களை வழங்கியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் எப். யு. வுட்லர் தெரிவித்தார்.

அதன்படி, சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர்கள், பொலிஸ் பரிசோதகர்கள் மற்றும் உதவிப் பொலிஸ் பரிசோதகர்கள் ஆகியோர் அடங்கிய குழுவுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. (அ)

## ஒன்லைன் சூதாட்டம் 11 இந்தியர்கள் கைது!

கொழும்பு, ஒக. 06

ஒன்லைன் சூதாட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டக் குற்றச்சாட்டில் 11 இந்தியப் பிரஜைகள் தலங்கம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தலங்கம பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், நேற்று முன் தினம் இரவு தலங்கம, அக்குரேகொடவில் முன்னெடுக்கப்பட்ட சோதனையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சோதனையின்போது, கணினிகள் மற்றும் மொபைல் போன்களைப் பயன்படுத்தி சூதாட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக எட்டு ஆண்களும் மூன்று பெண்களும் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது, 20 மொபைல் போன்கள், மூன்று மடிக் கணினிகள் மற்றும் ஒரு ரப்லட் சாதனத்தையும் அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

பெண் சந்தேக நபர்கள் 22, 30 மற்றும் 43 வயதுடையவர்கள், ஆண் சந்தேக நபர்கள் 25, 26, 27 மற்றும் 29 வயதுடைய இந்தியர்கள்.

இது சம்பந்தமான மேலதிக விசாரணைகளை தலங்கம பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

## லின்டன் சில்வாவுக்கு கொலை அச்சுறுத்தல்

கொழும்பு, ஒக. 06

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் தலைவரான கெஹல்பத்தர பத்மே, தனது நெருங்கிய உதவியாளர் ஒருவரைக் கைது செய்ததற்காக மேல் மாகாண குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் லின்டன் சில்வாவுக்கு தொலைபேசியில் கொலை மிரட்டல் விடுத்துள்ளார்.

நேற்று முன் தினம் இரவு சுமார் 8.45 மணியளவில் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு இவ்வாறு மிரட்டல் விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விமான நிலையத்தில் வைத்து 39 வயதுடைய கம்பஹா தேவா என்ற நபர் விமான நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, குறித்த நபர் கெஹல்பத்தர பத்மேவின் நெருங்கிய உதவியாளரென தெரியவந்துள்ளது.

குறித்த சந்தேக நபர் கொலை உட்பட பல குற்றங்களில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மேலும் அவர் தொடர்பான மேலதிக விசாரணைகள் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரோஹன் ஒலுகல மற்றும் மேல் மாகாண குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் லின்டன் சில்வா ஆகியோரின் தலைமையில் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறான சூழ்நிலையிலேயே தலைமறைவாகியுள்ள கெஹல்பத்தர பத்மேவிடம் இருந்து தொலைபேசி அழைப்பு மேற்கொள்ளப்பட்டு மேல் மாகாண குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் லின்டன் சில்வாவுக்கு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 200,244 சுற்றுலாப் பயணிகள் ஜூலையில் நாட்டுக்கு வருகை

கொழும்பு, ஒக. 06

இந்த ஆண்டு ஜூலை மாதத்தில் மாத்திரம் 2 இலட்சத்து 244 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்த தொகையானது, கடந்த 2024ஆம் ஆண்டு ஜூலை மாதத்துடன் ஒப்பிடுகையில் இது 6.6 சதவீத அதிகரிப்பாகுமென அந்த அதிகார சபை குறிப்பிடப்பிட்டுள்ளது.

இதன்படி கடந்த ஜூலை மாதத்தில் இந்தியாவிலிருந்து மொத்தமாக 37,128 சுற்றுலாப் பயணிகளும், பிரித்தானியாவில் இருந்து 23,475 பேரும் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

அத்துடன், நெதர்லாந்திலிருந்து 15,556 பேரும், சீனாவிலிருந்து 12,982 பேரும் கடந்த ஜூலை மாதம் இலங்கைக்கு சுற்றுலா மேற்கொண்டுள்ளனர்.

இதற்கமைய, 2025 ஆம் ஆண்டு முதல் 7 மாதங்களில், நாட்டுக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1,368,288 ஆகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. (அ)

# மீன்பிடிப் படகுகளின் தரவுகள் தவறானவை

கொழும்பு, ஒக. 06

மீன்பிடிப்படகுகள் தொடர்பான தரவுகள் தவறாக உள்ளதாக கடற்றொழில் பிரதி அமைச்சர் ரத்ன கமகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை நேற்று முன் தினம் முதல் பாணந்துறை துறைமுகத்தில் இருந்து மீன்பிடிப் பயண தொகுப்புப் பதிவை ஆரம்பித்துள்ளது.நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையான தரவுத்தொகுப்பு அமைப்பை உருவாக்கும் நோக்கில், மீன்பிடித் துறையிலும் சரியான தரவுகள் இல்லாததைக் கண்டறிந்த அமைச்சு, இப்போது அனைத்து மீன்பிடிப் பயணங்களையும் முறையாக பதிவு செய்ய முடிவு செய்துள்ளது.

நேற்று முன் தினம் முதல் எதிர்வரும் 20 வரை மீன்பிடி கப்பல்கள் எண்ணிக்கைகள் பதிவு செய்யப்படும். அடுத்த வாரம் முதல் பல நாள் மீன்பிடி பயணங்களும் பதிவு செய்யப்படும்.பாரம்பரிய மற்றும் உள்வாரி நீர்த்தடங்களில் இடம் பெறும் மீன்பிடி பயணங்களும் வருங்காலத்தில் பதிவு செய்யப்படும்-என்றார். (அ)

# அரசின் வெளிநாட்டுக் கொள்கையால் நாட்டுக்கு எதிர்காலத்தில் பாரிய அழிவு

## முஜிபுர் ரஹ்மான் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஒக. 06

**இஸ்ரேலியர்கள் இலங்கைக்கு வருவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்பது அமெரிக்காவின் அழுத்தமாகவோ அல்லது நிபந்தனையாகவோ இருக்கலாம்.ஆனால் இஸ்ரேலியர்களை நாட்டுக்குள் அனுமதிப்பதால் எதிர்காலத்தில் பாரிய அழிவுகளை சந்திக்க நேடும் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.**

**கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாட்டுக்கு வருகை தந்துள்ள வெளிநாட்டு பிரஜையொருவர் அருகம்பை பிரதேசத்திலிருந்து காணொளியொன்றை வெளியிட்டுள்ளார்.

தற்போது அருகம்பை இஸ்ரேலின் ஒரு கொலனியாக மாறியிருக்கிறது என்பது வெளிநாட்டவர்களுக்கு கூட புரிந்துள்ளது.

நாட்டின் சுற்றுலாத்துறை அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர் உள்ளிட்ட அனைவரும் கசாயம் அருந்தியவர்களைப் போன்று இருக்கின்றனர்.

கடந்த ஆட்சி காலத்தில் தற்போதைய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பலஸ்தீனுக்கு ஆதரவாக அமெரிக்க தூதரகத்துக்கு முன்பாகவே நீண்ட நாட்களைக் கழித்திருக்கின்றார்.

ஆனால் இன்று அவரிடமிருந்து எந்த சத்தமும் இல்லை.

மாறாக இஸ்ரேலையும், அமெரிக்காவையும் அரவணைத்துக் கொண்டிருக்கின்றனர்.

இஸ்ரேலியர்கள் மொசாட்டைப் போன்று இலங்கையில் சுதந்திரமாக செயற்படக் கூடிய சூழல் காணப்படுகிறது.

இது தேசிய பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தலாகும் என நாம் மீண்டும் மீண்டும் எச்சரிக்கின்றோம்.

இஸ்ரேலுடன் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என அரசாங்கம் எண்ணுகிறது.

அவர்களுடன் உறவாடினால் இலாபத்தை விட பாரிய இழப்பீட்டை செலுத்த நேரிடும் என்பதையும் அரசாங்கத்துக்கு நினைவுபடுத்துகின்றோம்.

இஸ்ரேலியர்கள் இலங்கைக்கு வந்து கொலனி அமைப்பதற்கு இடமளித்தமைக்காக பின்னர் அனைவரும் வருந்த வேண்டிய நிலைமையும் ஏற்படும்.

எந்த அடிப்படையில் கட்டணமின்றி இஸ்ரேலியர்களுக்கு விசா வழங்க வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் தீர்மானித்தார் என்பது எமக்கு தெரியாது.

இது அமெரிக்காவின் அச்சுறுத்தலா? அல்லது யாருடைய அச்சுறுத்தல் என்பதும் எமக்கு தெரியாது.

இஸ்ரேலியர்களுக்கு இலங்கை வர வாய்ப்பளிக்குமாறு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டிருக்கக் கூடும்.

இது அமெரிக்காவின் நிபந்தனையாகக் கூட இருக்கலாம்.

அமெரிக்கா, இஸ்ரேல் என்பவை வெளியுலகுக்கு இரு வேறு நாடுகள் என்ற போதிலும் இன்று அவை இரண்டும் ஒரே நாடுகள் ஆகும்.

இந்த அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கையால் நாட்டுக்கு எதிர்காலத்தில் பாரிய அழிவு காத்திருக்கிறது-என்றார். (அ)

# வெளிநாட்டவர்களுக்கு சாரதி அனுமதி உள்நாட்டு தொழிலாளர்களை பாதிக்கும்

## முச்சக்கரவண்டி ஓட்டுநர்கள் தொழிற்சங்கம்

கொழும்பு, ஒக. 06

வெளிநாட்டவர்களுக்கு விமான நிலையத்தில் சாரதி அனுமதிப்பத்தரங்களை பெற அனுமதி வழங்கியுள்ளமை நாட்டின் தொழிலாளர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் விடயம் என தேசிய ஒருங்கிணைந்த முச்சக்கரவண்டி ஓட்டுநர்கள் தொழிற்சங்கத்தின் பொதுச் செயலாளர் எல். ரோஹண பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-வெளிநாட்டுப் பயணிகளுக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் இறங்கியவுடன் சாரதி அனுமதிப்பத்திரத்தை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. ஐரோப்பியர்களுக்கு எம்முடைய நாட்டில் வாகனம் ஓட்டும் அனுபவம் இல்லை.

இத்தகைய பின் னணியில் அவர்களுக்கு எம்முடைய நாட்டின் அழகை இரசிக்க முன்னராக விபத்தில் சிக்கிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் .

இத்தகைய அனுமதிப்பத்திரத்தை வழங்கும் திட்டம், சுற்றுலா சார்ந்த ஓட்டுநர்கள் மற்றும் போக்குவரத்து தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைத் பெரும்பாலும் பாதிக்கும் விடயமாக அமைந்துவிடும்.

முச்சக்கரவண்டி ஓட்டுநர்கள் , வாடகை வண்டி ஓட்டுநர்கள் உள்ளிட்ட பலர் வேலை இழக்கும் நிலை உருவாகும். இது மக்கள் அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ந்தெழும் நிலையை உண்டாக்கும்.

அரசாங்கம் உரிய தரப்பினருடன் ஆலோசிக்காமல், அரசியல் தொடர்புகளை உடைய சங்கங்களுடன் மாத்திரம் பேசி முடிவுகளை எடுக்கின்றன. நாட்டின் மக்களின் தொழிற் பாதுகாப்பைப் பற்றி சிந்திக்கா மல், வெளிநாட்டவர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் திட்டம் நாட்டுக்கு இடர்பாடுகளை தோற்றுவிக்கும் என தெரிவித்துக்கொள்ள விரும்பு கின்றோம் -என்றார். (அ)

# இளைஞர் சங்க தேர்தல்களில் பெரும் அரசியல் தலையீடுகள்

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக. 06

இளைஞர் சங்க தேர்தல்களில் அரசியல் தலையீடு காணப்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் சுஜித் சஞ்சய பெரேரா தெரிவித்துள்ளார்.

எதிர்கட்சித்தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இளைஞர் சங்க தேர்தல்களில் அரசியல் தலையீடு காணப்படுகின்றது. கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு தற்போதைய அரசாங்கம் இளைஞர் சேவைகள் மன்றத் தேர்தல்களில் அரசியல் தலையீடுகளை செய்கிறது.உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள், அவர்களது ஆதரவாளர்களை பதவிக்கு நியமிக்க பட்டியல்கள் அனுப்பி அதிகாரம் கைப்பற்ற முயல்கிறார்கள்.இவை இளைஞர்களிடையே பிளவையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன், நாட்டின் உள்நாட்டு தொழில்துறைகள் வீழ்ச்சி அடைந்துள்ளன. செவனகல, ஹிங்குரான, பெலவத்தை போன்ற சீனித் தொழில்கள் தற்போது கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

முன்னர் கசினோ முதலீடுகளுக்கு எதிராக பேசியவர்கள், தற்போது கசினோ உள்ளடங்கியுள்ள திட்டங்களில் பங்கேற்கின்றனர்.இது அரசின் இரட்டை நிலைமையை காட்டுகிறது-என்றார். (அ)

# தெவிநுவர எசல பெரஹராவில் திடீரெனக் குழம்பியது யானை!

கொழும்பு, ஒக. 06

தெவிநுவர எசல பெரஹரா ஊர்வலத்தின் போது, யானை ஒன்று திடீரென குழம்பியதால் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் வெளியான வீடியோக் காட்சிகள்,

யானை திடீரென அதன் பாகனைத் தாக்கிவிட்டு, பின்னர் நடந்து செல்வதைக் காட்டுகிறது.

யானை தொடர்ந்து ஆக்ரோஷமாக நடந்து கொள்கிறது.ஏனைய யானைப் பாகன்கள் குறித்த யானையை கட்டுப்படுத்தவும் நிலைமையைக் கட்டுப்படுத்தவும் முயற்சிக்கின்றனர்.

பெரஹராவைப் பார்க்க நடைபாதைகளில் அமர்ந்திருந்த பொதுமக்கள் பீதியடைந்து பாதுகாப்பான இடங்களுக்கு ஓடிச் செல்வதைக் காண முடிந்தது. (அ)

# மத்திய கலாசார நிதியத்தின் திட்டங்களை பார்க்க அனுமதி

கொழும்பு, ஒக. 06

மத்திய கலாசார நிதியத்துக்குச் சொந்தமான திட்டங்களை பார்வையிட 18 வயதுக்குட்பட்ட சிறார்களுக்கு இலவச அனுமதி வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மத்திய கலாசார நிதிய நிர்வாக சபை இந்த முன்மொழிவை அங்கீகரித்துள்ளது.

உள்ளூர் சிறார்களிடையே கலாசார பாரம்பரியத்தின் மீதான மதிப்பை ஏற்படுத்துவதும், தேசிய பாரம்பரிய இடங்கள் குறித்த விழிப்புணர்வை அதிகரிப்பதும் இதன் முதன்மை நோக்கமாகும்.

சிகிரியா, யாப் பகூவ, தமபுள்ளை உள்ளிட்ட மத்திய கலாசார நிதியத்திற்குச் சொந்தமான 26 தொல்பொருள் மதிப்புமிக்க தளங்களை நுழைவுச்சீட்டு இன்றி உள்ளூர்சிறார்கள்பார்வையிடலாம்.

இதற்கு இணையாக, வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளின் கீழ் வெளிநாட்டு சிறார்களுக்கும் இலவச நுழைவு அனுமதி வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் கமகேதர திசாநாயக்க தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதூரில் 17 பேர் படுகொலை

# 19 வருடங்களாகியும் நீதி கிடைக்கவில்லை

மூதூர், ஓக. 06

**திருகோணமலை, மூதூர் பகுதியில் 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த தன்னார்வத்தொண்டு நிறுவனமான ஆக்ஷன் பாம் என்ற நிறுவனத்தில் பணியாற்றிய 17 பேர் படுகொலை செய்யப்பட்டு 19 வருடங்களாகியும் இதுவரை நீதி கிடைக்கவில்லை என உயிரிழந்தவர்களின் உறவினர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.**

2006ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31ஆம் திகதி வழமை போல் கடமையின் நிமித்தம் மூதூரில் உள்ள அலுவலகத்துக்குச் சென்றிருந்த பணியாளர்கள், மூதூர் பகுதியில் நிலவிய யுத்த சூழ்நிலையின் காரணமாக அலுவலகத்தை விட்டு வெளியேற முடியாத காரணத்தால், அலுவலகத்திலேயே தங்கியிருந்தனர்.

இந்த நிலையில், ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி அவர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

மூதூர் பொது மருத்துவமனைக்கு அருகில் இயங்கிவந்த ஆக்ஷன் பாம் எனும் சர்வதேச தொண்டு நிறுவனத்தில் கடமையாற்றிக்கொண்டிருந்த 17 பணியாளர்களையும் ஆயுதம் தரித்த சீருடைக்காரர்கள் நிறுவன வளாகத்துக்குள் நுழைந்து, பணியாளர்களை நிலத்தில் குப்புறப்படுக்கச் செய்து அவர்களை பின் பக்கத் தலையில் சுட்டுப் படுகொலை செய்ததாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்தச் சம்பவத்தில் 4 பெண்கள் உட்பட 17 உள்ளூர் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

## மஹோற்சவத் திருவிழா




காரைதீவு, ஓக. 06

அம்பாறை மாவட்டம் காரைதீவு மாவடி சிறீ கந்தசுவாமி ஆலய வருடாந்த ஆடிவேல் விழா மஹோற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

கடந்த 25 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பித்த இந்த மஹோற்சவ விழா தினமும் பகல் இரவு திருவிழாவாக வசந்த மண்டப பூஜையும் சுவாமி உள்வீதி வெளிவீதி வருதலும் ஆலய பிரதம குரு சிவசிறீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 09ஆம் திகதி சமுத்திர தீர்த்தம் நடைபெறவுள்ளது.

(எ)






# திருகோணமலையில் நினைவேந்தல் நிகழ்வு

திருகோணமலை, ஓக. 06

மூதூரில் தன்னார்வ தொண்டு நிறுவன பணியாளர்கள் 17 பேர் படுகொலை செய்யப்பட்டு நேற்று முன்தினத்துடன் 19 வருடங்களாகிய நிலையில் திருகோணமலை கடற்கரையில் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

உயிரிழந்தவர்களின் படங்கள் காட்சிப்படுத்தப்பட்டு மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டு உணர்வு பூர்வமாக நினைவஞ்சலி செலுத்தப்பட்டது. இதன்போது கருத்து தெரிவித்த ராவணா சேனா அமைப்பின் தலைவர் கு. செந்தூரன், இலங்கை இராணுவத்தால் 17 தன்னார்வ ஊழியர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இவர்களுக்கான நீதி கிடைக்க வேண்டும். நீதியின்றி ஏமாற்றப்பட்டு 19 வருடங்கள் கடந்துள்ளன. ஏமாற்றப்படும் பட்டியலில் தான் தமிழர்கள் இருந்து கொண்டிருக்கிறோம்- என்றார்.

# சமஷ்டி தீர்வு வழங்க கோரி மட்டக்களப்பில் போராட்டம்

மட்டக்களப்பு, ஓக. 06

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்பு குழு ஏற்பாட்டில் நடைபெறும் 100 நாள் செயல்முனைவின் நான்காவது வருடத்துக்கான தொடர் இம்மாதம் ஆரம்பிக்கப்பட்டு நேற்று முன்தினம் நான்காவது நாளாக மட்டக்களப்பு வாகரை பிரதேசத்தின் கட்டுமுறிவு சந்திப் பகுதியில் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

“சமூகப் பிரச்னைகளும் - சமஷ்டி முறையிலான தீர்வுகளும்” என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் மக்கள் வாழ்வின் உண்மையான சவால்களை முன்வைத்து நிரந்தர தீர்வுகளுக்கான அரசியல் உரையாடலை உருவாக்கும் நோக்கில் இந்த 100 நாள் செயல் முனைவு நடைபெறுகின்றது.

இலங்கை அரசே இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை உறுதி செய்க, சமஷ்டியே தீர்வு, எங்கள் வளம் எங்கள் உரிமை போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு அமைதியான முறையில் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் புதிய தலைமைத்துவங்களுடன் ஆட்சிப் பொறுப்பேற்றுள்ளது. ஜனநாயகம், கட்டமைப்பு மாற்றம், இன மத பேதமின்மை எனும் கொள்கைகளை முன்வைத்து இவர்கள் ஆட்சிக்கு வந்துள்ளனர்

எனினும், அரசியல் தீர்வு குறித்து தேசிய மக்கள் சக்தி அரசு மௌனம் காத்து வருகின்றது எனவும் இதன்போது சுட்டிக் காட்டப்பட்டதுடன்,

வடக்கு - கிழக்கில் இராணுவ மயமாக்கம், காணி அபகரிப்பு, தொல்பொருள் திணைக்களத்தின் ஆக்கிரமிப்பு, மகாவலி குடியேற்றம் மற்றும் சிங்கள மயமாக்கம், பௌத்த மயமாக்கம், தமிழ் மொழி உரிமை புறக்கணிப்பு, இனவாத அச்சுறுத்தல்கள் ஆகியன தொடர்ந்த வண்ணமுள்ளதாகவும் இந்த அடக்கு முறைகளை வைத்துக்கொண்டு இன மத பேதமின்மை குறித்து அரசு கதைப்பது நேர்மையின்மையாகும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

(எ)

# யானை தாக்கியதில் இளம் தாய் மரணம்!

## தெய்வாதீனமாக தப்பிய 3 வயது குழந்தை

மட்டக்களப்பு, ஓக. 06

மட்டக்களப்பு, ஆயித்தியமலை பொலிஸ் பிரிவிலுள்ள மகிழவெட்டுவான் பகுதியில் யானை தாக்கியதில் இளம் தாய் ஒருவர் உயிரிழந்ததுடன் 3 வயது குழந்தை தெய்வாதீனமாக உயிர் தப்பிய சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இடம் பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மகிழவெட்டுவானை சேர்ந்த 35 வயதுடைய ரவிச்சந்திரன் பசுபதி என்பவரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தார்.

குறித்த பிரதேசத்தில் வீட்டின் முற்றத்தில் சம்பவதினத்தன்று இரவு 07. 00 மணியளவில் தனது 3 வயது பெண் குழந்தையுடன் தாய் ஒருவர் இருந்த நிலையில் குடிமனைக்குள் உட்புகுந்த யானை அவர்கள் மீது தாக்கியதில் தாயார் ஸ்தலத்திலே உயிரிழந்ததுடன் குழந்தை தெய்வாதீனமாக உயிர்தப்பியது.

(எ)

# சவளக்கடை பொலிஸ் நிலைய அரையாண்டு அணிவகுப்பு

கல்முனை, ஓக. 06

சவளக்கடை பொலிஸ் நிலையத்தின் 2025ஆம் ஆண்டுக்கான அரையாண்டு அணிவகுப்பு மரியாதை மற்றும் பரிசோதனை நிகழ்வு சவளக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வை. சி. இந்திரஜீத் டி சில்வா தலைமையில் நேற்று முன்தினம் பொலிஸ் நிலைய உள்ளக மைதானத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் டி. பி. எச். கலனசிறி பிரதம விருந்தினராக கலந்து கொண்டதுடன் அணிவகுப்பில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களின் அணிவகுப்பு மரியாதையை பார்வையிட்டு ஏற்றுக் கொண் டார்.

மேலும் பொலிஸாரால் பொது மக்களுக்கு வழங்கப்படும் பொலிஸ் சேவை பிரிவு நிலைய பொலிஸ் சுற்றுச்சூழல் பொலிஸ் உத்தியோகத்தர்களின் தங்குமிட அறைகள், விடுதிகள், அலுவலகங்கள் என்பனவற்றை பார்வையிட்டதுடன் பொலிஸார் பயன்படுத்தும் வாகனங்களையும் பரிசோதனை மேற்கொண்டார்.

இதன்போது பொலிஸ் உத்தியோகத்தர்களின் சுகாதார முறைகள், உடைகள், வாகனங்கள் என்பனவற்றை பார்வையிட்டதுடன் பொலிஸ் நிலையத்திலுள்ள பௌதீக வளப் பற்றாக்குறை தொடர்பிலும் ஆராய்ந்தார்.

(எ-01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச சட்டங்களை இஸ்ரேல் மீறுகின்றது!

## காஸாவுக்குள் மனிதாபிமான உதவிகளை விமானம் மூலம் போட்டது கனடா

காஸா, ஓக. 06

**காஸாவுக்குள் வான்வழியாக மனிதாபிமான உதவிகளை வீசியுள்ளதாக கனடா தெரிவித்துள்ளது. அத்தோடு, இஸ்ரேல் சர்வதேச சட்டங்களை மீறுகின்றது எனக் குற்றஞ்சாட்டியுள்ளது.**

சிசி - 130 ஜே ஹேர்குலிஸ் விமானத்தை பயன்படுத்தி கனடாவின் ஆயுதப்படையினர் காஸாவுக்குள் மனிதாபிமான உதவிப் பொருட்களை போட்டனர் என கனடா அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கனடாவின் ஆயுதப்படையினர் தங்கள் விமானங்களை பயன்படுத்தி முதல் தடவையாக காஸாவுக்குள் மனிதாபிமான பொருட்களை போட்டுள்ளனர் என கனடா ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கனடா, எகிப்து உட்பட ஆறு நாடுகள் 120 உணவுப்பொதிகளை காஸாவுக்குள் வீசியுள்ளன என எகிப்து தெரிவித்துள்ளது.

இதேவேளை இஸ்ரேலின் கட்டுப்பாடுகள் மனிதாபிமான அமைப்புகளுக்கு சவாலை தோற்றுவித்துள்ளன. மனிதாபிமான உதவிகளை தடுப்பது சர்வதேச சட்டங்களை மீறும் செயல். இதனை உடனடியாக முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என கனடா வேண்டுகோள் விடுத்துள்ளது. (எ)

# அமெரிக்க அரசு எங்களை குறிவைப்பது நியாயமற்றது

## இந்தியா அரசு பதில்

புதுடில்லி, ஓக. 06

ரஷ்யாவில் இருந்து அதிக அளவில் கச்சா எண்ணெய் வாங்கும் இந்தியாவுக்கு கூடுதல் வரி விதிக்கப்படும் என்று எச்சரித்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புக்கு இந்தியா பதிலடி கொடுத்துள்ளது.

இந்திய வெளிவிவகாரத் துறை அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில், “உக்ரைன் போர் தொடங்கிய பின்னர் ரஷ்யாவில் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்ததற்காக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளால் இந்தியா குறிவைக்கப்பட்டுள்ளது. உண்மையில், மோதல் வெடித்த பிறகு, வழக்கமாக கச்சா எண்ணெய் விநியோகம் செய்யும் நாடுகள் அனைத்தும் ஐரோப்பாவுக்கு திருப்பி விடப்பட்டதால் தான் ரஷ்யாவிலிருந்து இந்தியா இறக்குமதி செய்யத் தொடங்கியது. உலகளாவிய எரிசக்தி சந்தைகளின் ஸ்திரத்தன்மையை வலுப்படுத்துவதற்காக அந்த நேரத்தில் இந்தியாவின் இத்தகைய இறக்குமதிகளை அமெரிக்கா தீவிரமாக ஊக்குவித்தது”- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெயை இறக்குமதி செய்தால் இந்தியாவுக்கு அபராதமும் கூடுதல் வரியும் விதிக்கப்படும் என்று ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்து வருகிறார். ஆனால், அமெரிக்காவின் அழுத்தத்தை மீறி ரஷ்யாவில் இருந்து 4 சரக்கு கப்பல்களில் குஜராத்தின் முந்த்ரா துறைமுகத்துக்கு கச்சா எண்ணெய் கொண்டு வரப்பட்டிருக்கிறது. (எ)

# இந்தியாவுக்கு வரிகளை கணிசமாக உயர்த்துவேன்

## ட்ரம்ப் மீண்டும் எச்சரிக்கை



வாஷிங்டன், ஓக. 06

ரஷ்யாவிலிருந்து அதிகளவில் கச்சா எண்ணெய் வாங்கும் இந்தியா மீது வரிகளை உயர்த்தப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் எச்சரித்துள்ளார்.

இது குறித்து தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் ட்ரம்ப் கூறியதாவது “இந்தியா, ரஷ்யாவில் இருந்து எண்ணெயை பெருமளவில் வாங்குவது மட்டுமல்லாமல், வாங்கிய எண்ணெயில் பெரும்பகுதியை திறந்த சந்தையில் அதிக இலாபத்துக்கு விற்கிறது. ரஷ்ய போர் இயந்திரத்தால் உக்ரைனில் எத்தனை பேர் கொல்லப்படுகிறார்கள் என்பது பற்றி அவர்களுக்கு கவலையில்லை. இதன் காரணமாக, அமெரிக்காவுக்கு இந்தியா செலுத்தும் வரியை நான் கணிசமாக உயர்த்துவேன். இந்த விடயத்தில் உங்கள் கவனத்துக்கு நன்றி”- என்று தெரிவித்துள்ளார்.

கடந்த 30 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் இந்தியப் பொருட்களுக்கு 25 சதவீதம் வரியை அறிவித்தார். மேலும், ரஷ்யாவிலிருந்து எண்ணெய் மற்றும் ஆயுதங்கள் வாங்கினால் கூடுதல் வரி விதிக்கப்படும் எனவும் எச்சரித்தார். ரஷ்யா - உக்ரைனுடன் சமாதான ஒப்பந்தத்துக்கு ஒப்புக் கொள்ளாவிட்டால், ரஷ்யாவிலிருந்து எண்ணெய் வாங்குவதைத் தொடரும் நாடுகளுக்கு 100 சதவீதம் வரை கூடுதல் வரிகளை விதிப்பது குறித்து பரிசீலிப்பதாகவும் ட்ரம்ப் கூறியிருந்தார். (எ)

# ஆஸியில் பலஸ்தீன ஆதரவு போராட்டம்




சிட்னி, ஓக. 06

அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற பலஸ்தீன ஆதரவு ஆர்ப்பாட்டத்தின் போது ஆயிரக்கணக்கானவர்கள் சிட்னி துறைமுகத்தின் பாலத்தின் ஊடாக பேரணியாக சென்றனர்.

அவுஸ்திரேலியாவின் உச்ச நீதிமன்றம் அனுமதி வழங்கிய நிலையிலேயே இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்தவர்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என வர்ணித்துள்ளனர்.

காஸா யுத்தத்தை நிறுத்துமாறு அரசியல்வாதிகளை கோரும் செய்திகளுடன் ஆயிரக்கணக்கானவர்கள் கொட்டும் மழையிலும் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டனர்.

விக்கிலீக்ஸ் ஸ்தாபகர் ஜூலியன் அசஞ்சேயும் இதில் கலந்துகொண்டார்.

வெட்கம் வெட்கம் இஸ்ரேல் வெட்கம் வெட்கம் அமெரிக்கா என ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கோஷமிட்டனர்? எங்களுக்கு என்ன வேண்டும் யுத்த நிறுத்தம் எப்போதும் வேண்டும் எனவும் அவர்கள் கோஷமிட்டனர்.


ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டவர்களுக்கு ஆதரவாக பல பெண்கள் தங்கள் குழந்தைகளுடன் பாலத்தின் இருபக்கத்திலும் திரண்டிருந்தனர்.

காஸா உலகின் ஏனைய பக்கத்தில் உள்ளது என்பது எனக்குத் தெரியும். ஆனால், அது எங்களை இங்கு பெருமளவில் பாதிக்கின்றது எனத் தெரிவித்த அலெக் பெவிலே என்ற தந்தையொருவர் காஸாவின் சிறுவர்களை தனது மூன்று வயது மகனுடன் ஒப்பிட்டுள்ளதுடன் நாங்கள் உதவிகள் மூலம் மேலும் உதவுவோம் என தெரிவித்துள்ளார்.

எங்கள் அரசாங்கம் இஸ்ரேலுக்கு எதிராக தடைகளை விதிக் கவில்லை எனத் தெரிவித்த ஜாரா வில்லியம் தனது குழந்தையுடன் காணப்பட்டார். மக்களை முழுமையாக பலவந்தமாக பட்டினி போட்டுள்ள நிலையில் எங்களால் எதுவும் செய்ய முடியவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். இரண்டு மணிநேரம் இடம் பெற்ற இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் 90,000இற்கும் அதிக மான மக்கள் கலந்து கொண்டனர். (எ)

# அணு ஆயுதங்கள் பற்றி பேசும்போது மிக மிக கவனமாக பேச வேண்டும்

## ட்ரம்ப்பின் மிரட்டல் குறித்து ரஷ்யா



மொஸ்கோ, ஓக. 06

அணு ஆயுதங்கள் குறித்து பேசும்போது மிக மிக கவனமாகப் பேச வேண்டும் என்று ரஷ்ய ஜனாதிபதி மாளிகையான கிரம்ளின் செய்தித் தொடர்பாளர் டிமித்ரி பெஸ்கோவ் தெரிவித்தார்.

உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கை, அணு ஆயுதங்களைக் கொண்டுள்ள நாடுகளுக்கு இடையேயான போராக மாறக்கூடும் என ரஷ்ய முன்னாள் ஜனாதிபதி திமித்ரி மெத்வதேவ் கூறியது தொடர்பில் செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இரண்டு (அணு ஆயுத) நீர்மூழ்கிக் கப்பல்களை பொருத்தமான பகுதிகளுக்கு நகர்த்த தான் உத்தரவிட்டிருப்பதாக கடந்த முதலாம் திகதி தெரிவித்தார்.

இந்த நிலையில், இது குறித்து செய்தியாளர்களிடம் கூறிய கிரம்ளின் செய்தித் தொடர்பாளர் டிமித்ரி பெஸ்கோவ், “அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல்கள் போர் கடமையில் உள்ளன என்பது தெளிவாகிறது. இது ஒரு தொடர் செயல்முறை. இதுதான் முதலில் கவனிக்கத்தக்கது.

பொதுவாக இதுபோன்ற சர்ச்சைகளில் நாங்கள் ஈடுபட விரும்ப மாட்டோம். எனவே, இது குறித்து எந்தக் கருத்தும் தெரிவிக்க நாங்கள் விரும்ப மாட்டோம். அதேநேரத்தில், அணு ஆயுதம் குறித்துப் பேசும் போது அனைவரும் மிக மிக கவனமாகப் பேச வேண்டும்”- என தெரிவித்தார்.

ட்ரம்ப்பின் கருத்து பதற்றத்தை அதிகரித்துள்ளதாக ரஷ்யா பார்க்கிறதா என்ற கேள்விக்குப் பதிலளித்த டிமித்ரி பெஸ்கோவ், “எந்த ஒரு பதற்ற அதிகரிப்பு குறித்தும் நாங்கள் இப்போது பேசவில்லை. மிகவும் சிக்கலான, மிகவும் பதற்றம் தரும் பிரச்சனைகள் விவாதிக்கப்படுகின்றன என்பது தெளிவாகிறது. பலரும் இது குறித்து உணர்ச்சிவசப்படுகின்றனர்”- என கூறினார். (எ)

# சிங்கப்பூரில் தமிழ் மக்களின் வரலாற்று ஆவணம் வெளியீடு

சிங்கப்பூர் சிற்றி, ஓக. 06

காலத்தை வென்ற சிங்கப்பூர் தமிழ் மக்களின் வரலாற்று ஆவணமான 'சிங்கப்பூர் தமிழர்' கலைக்களஞ்சியத்தை சிங்கப்பூர் ஜனாதிபதி தர்மன் சண்முகரத்னம் மின்தளத்தில் வெளியிட்டுள்ளார்.

சிங்கப்பூரில் தேசிய நூலக சபை கட்டடத்தில் உள்ள டிராமா சென்டரில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற விழாவில், “சிங்கப்பூர் தமிழர் கலைக்களஞ்சியத்தை அந்த நாட்டு ஜனாதிபதி மின்தளத்தில் வெளியிட்டுள்ளார்.

200 ஆண்டு கால வரலாற்று ஆவணமான ‘சிங்கப்பூர் தமிழர்’ சமூகம், கலை, பண்பாடு, கல்வி, அரசியல் என சிங்கப்பூர் தமிழ் மக்களின் வாழ்வியல் களம் குறித்த பதிவுகளைக் கொண்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி அபார வெற்றி

## சமநிலையானது இங்கிலாந்து டெஸ்ட் தொடர்

லண்டன், ஒக. 06

5 ஆவது டெஸ்ட் போட்டியில் 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி அபார வெற்றி பெற்றது. இதன் மூலம் இந்தியா - இங்கிலாந்து டெஸ்ட் தொடர் 2 - 2 என்ற கணக்கில் சமனில் முடிவடைந்தது.

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இதில் முதல் 4 போட்டிகளின் முடிவில் தொடரில் இங்கிலாந்து 2-1 என்ற கணக்கில் (4ஆவது போட்டி சமநிலை) முன்னிலையில் இருந்தது.

இந்தத் தொடரின் முடிவை நிர்ணயிக்கும் 5ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி லண்டன் ஓவலில் கடந்த 31ஆம் திகதி தொடங்கியது. இதில் முதல் இன்னிங்சில் முறையே இந்தியா 224 ஓட்டங்களும் இங்கிலாந்து 247 ஓட்டங்களும் எடுத்தன. 23 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்ஸை ஆடிய இந்தியா 396 ஓட்டங்கள் எடுத்தது.

இதன் மூலம் இங்கிலாந்துக்கு 374 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இலக்கை நோக்கி 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து 3ஆவது நாள் முடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 50 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

இந்த நிலையில் மிகுந்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் 4ஆவது நாள் ஆட்டம் நடைபெற்றது.

இந்தச் சூழலில் 4ஆவது விக்கெட்டுக்கு ஜோ ரூட்டும் ஹாரி புரூக்கும் கைகோர்த்தனர். இந்திய பந்துவீச்சை சமாளித்த இருவரும் சிறப்பாக விளையாடி சதமடித்து அசத்தினர். ஹாரி புரூக் 111 ஓட்டங்களிலும் ஜோ ரூட் 105 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

தொடர்ந்து துடுப்பாட்டம் செய்த இங்கிலாந்து அணி 2ஆவது இன்னிங்ஸில் 76.2 ஓவர்களில் 6 விக்கெட்டுக்கு 339 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது போதிய வெளிச்சம் இல்லாததால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. தொடர்ந்து




மழையும் பெய்ததால் அத்துடன் 4ஆவது நாள் ஆட்டம் முடித்துக் கொள்ளப்பட்டது.

இங்கிலாந்தின் வெற்றிக்கு 35 ஓட்டங்கள் மட்டுமே தேவை என்ற நிலையில் இந்தியா வெற்றி பெற 4 விக்கெட்களை வீழ்த்த வேண்டும் என்ற பரபரப்பான சூழலில் 5ஆவது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே ஜேமி சுமித் (2 ஓட்டங்கள்) மற்றும் ஜேமி ஓவர்டென் (9 ஓட்டங்கள்) ஆகியோர் ஆட்டமிழந்தனர்.

இறுதியில் கஸ் அட்கின்சனின் (17 ஓட்டங்கள்) விக்கெட்டை சிராஜ் கைப்பற்றி இந்தியாவை வெற்றி பெற வைத்தார். இது சிராஜின் 5ஆவது விக்கெட்டாக பதிவானது. இங்கிலாந்து அணி 2ஆவது இன்னிங்ஸில் 85.1 ஓவர்களில் 367 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்களையும் இழந்தது. இதன் மூலம் இந்தியா 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதுடன் தொடரையும் 2 - 2 என்ற கணக்கில் சமன் செய்தது. (எ)

# கனடா ஓபின் ரென்னிஸ்: அரையிறுதியில் ரைபகினா

றொரண்டோ, ஒக. 06


கனடா ஓபின் ரென்னிஸ் தொடர் அரையிறுதிக்கு ரைபகினா முன்னேறியுள்ளார்.

இந்த ரென்னிஸ் போட்டி றொரண்டோ நகரில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் காலிறுதி ஆட்டம் ஒன்றில் கஜகஸ்தானின் ரைபகினா, உக்ரைனின் மார்டா கோஸ்ட்யுக் உடன் மோதினார்.


இதில் முதல் செற்றை ரைபகினா எளிதில் கைப்பற்றினார். இதனையடுத்து நடைபெற்ற 2ஆவது செற்றில் கோஸ்ட்யுக் காயமடைந்தார். இதனால் அவரால் மேற்கொண்டு விளையாட முடியவில்லை.

போட்டியை மேற்கொண்டு தொடர முடியாத சூழலில் ரைபகினா வெற்றியாளராக அறிவிக்கப்பட்டார். இதன் காரணமாக அவர் அரையிறுதிக்கும் தகுதி பெற்றுள்ளார்.

ரைபகினா அரையிறுதியில் விக்டோரியா எம்போகோ உடன் மோதவுள்ளார். (எ)



# கனடா ஓபின் ரென்னிஸ்: ரெய்லர் பிரிட்ஸ் வெற்றி



றொரண்டோ, ஒக. 06

கனடா ஓபின் ரென்னிஸ் தொடரில் ரெய்லர் பிரிட்ஸ் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள இந்த ரென்னிஸ் தொடர் றொரண்டோ நகரில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 4ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் அமெரிக்காவின் ரெய்லர் பிரிட்ஸ், செக் குடியரசின் ஜிரி லெஹெக்கா உடன் மோதினார்.

இதில் முதல் செற்றை ரெய்லர் பிரிட்ஸ் கைப்பற்றிய நிலையில் 2ஆவது செற்றை லெஹெக்கா கைப்பற்றினார். இதனையடுத்து நடைபெற்ற 3ஆவது செற்றை ரெய்லர் பிரிட்ஸ் கைப்பற்றி காலிறுதி சுற்றுக்குத் தகுதி பெற்றார். பிரிட்ஸ் இந்த ஆட்டத்தில் 7-6, 6-7 மற்றும் 7-6 என்ற செற் கணக்கில் போராடி வெற்றி பெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றார். (எ)




# 3 ஆவது ரி - 20 போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றி

## தொடரையும் கைப்பற்றி அசத்தியது

கயானா, ஒக. 06

மேற்கு இந்திய தீவுகளுக்கு எதிரான போட்டியில் 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி, 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றி அசத்தியது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, மேற்கு இந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் போட்டியில் பாகிஸ்தானும் 2ஆவது போட்டியில் மேற்கு இந்திய தீவுகள் அணியும் வெற்றி பெற்றன. இந்த நிலையில், தொடர் யாருக்கு என்பதைத் தீர்மானிக்கும் 3ஆவது போட்டி நடைபெற்றது.

முதலில் துடுப்பாட்டம் செய்த பாகிஸ்தான் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 189 ஓட்டங்கள் எடுத்தது. பாகிஸ்தான் தரப்பில் அதிகபட்சமாக சாஹிப்சாதா பர்ஹான் 74 ஓட்டங்கள் எடுத்தார்.

இதையடுத்து 190 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி மட்டுமின்றி தொடரை கைப்பற்றலாம் என்ற நிலையில் களமிறங்கிய மேற்கு இந்திய தீவுகள் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 176 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றி அசத்தியது.

# கனடா ஓபின் ரென்னிஸ்: கரேன் கச்சனோவ் வெற்றி


றொரண்டோ, ஒக. 06

கனடா ஓபின் ரென்னிஸ் தொடரில் வெற்றி பெற்ற கரேன் கச்சனோவ் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள கனடா ஓபின் சர்வதேச ரென்னிஸ் போட்டி றொரண்டோ நகரில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதி ஆட்டம் ஒன்றில் ரஷ்யாவின் கரேன் கச்சனோவ், அமெரிக்காவின் அலெக்ஸ் மைக்கல்சனுடன் மோதினார்.

இதில் தொடக்கம் முதலே சிறப்பாக செயல்பட்ட கரேன் கச்சனோவ் 6 - 4 மற்றும் 7 - 6 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

இவர் அரையிறுதியில் ஸ்வெரெவ் உடன் பலப்பரீட்சை நடத்தவுள்ளார். (எ)



## டெஸ்ட் கிரிக்கெட் தொடரில்

# பும்ராவின் சாதனையை சமன் செய்த முகமது சிராஜ்

லண்டன், ஒக. 06

டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் ஜஸ்பிரித் பும்ராவின் மாபெரும் சாதனையை முகமது சிராஜ் சமன் செய்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு "ஆண்டர்சன் - டெண்டுல்கர் " கிண்ணத்துக்கான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது.

இந்தத் தொடரில் சிறப்பாக பந்துவீசிய இந்திய வேகப் பந்து வீச்சாளர் முகமது சிராஜ் மொத்தம் 23 விக்கெட்கள் வீழ்த்தி அசத்தினார். இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இங்கிலாந்தில் நடைபெற்ற ஒரு தொடரில் அதிக விக்கெட்கள் கைப்பற்றிய இந்திய வீரர் என்ற பும்ராவின் மாபெரும் சாதனையை சிராஜ் சமன் செய்துள்ளார்.

அந்தப் பட்டியல் வருமாறு,

1. ஜஸ்பிரித் பும்ரா/முகமது சிராஜ் - 23 விக்கெட்கள்,
2. புவனேஸ்வர் குமார் - 19 விக்கெட்கள் (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடளாவிய...

மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பட்டதாரி ஆசிரியர் ஆட்சேர்ப்பு தொடர்பில் கடந்த 2023.01.17 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தாலும் அதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மனுவொன்று சமர்ப்பிக்கப்பட்டது.

அதனையடுத்து நீதிமன்றால் இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் அதற்கான போட்டிப் பரீட்சை இடைநிறுத்தப்பட்டு தற்போது வரை பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்படவில்லை.

நாடளாவிய ரீதியில் 39267 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றது. கல்விச் சுற்றிக்கையின்படி 2604 வெற்றிடங்கள் அகற்றப்பட்டுள்ளன.

2022ஆம் ஆண்டின் டிப்ளோமா மாகாணப் பாடசாலைகளுக்கு கடந்த 2025.05.02 ஆம் திகதியிலிருந்து நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது. தமிழ் பாடசாலைகளுக்கு 345 நியமனங்களும், தேசிய பாடசாலைகளுக்கு 968 நியமனங்களும், ஆங்கில பாடசாலைகளுக்கு 381 நியமனங்களும் வழங்கப்பட்டுள்ளன.

மாகாணங்கள் உள்ளிட்ட அனைத்து நியமனங்களும் சிங்களப் பாடசாலைகளில் - 2281 நியமனங்களும் தமிழ் மொழி பாடசாலைகளில் 1401 நியமனங்களும் ஆங்கில மொழி பாடசாலைகளுக்கு 679 நியமனங்களும் வழங்கப்பட்டுள்ளன - என்றார். (அ)

## 200 பேர்...

தெரிவித்த சட்டத்தரணி ரனித்தா ஞானராஜா, எவரும் எதனையும் அடையாளம் காட்டவில்லை என்றார்.

செம்மணி அகழ்வுப்பணிகள் இரண்டாம் கட்டத்தின் 31 ஆவது நாள் யாழ்ப்பாணம் நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் மேற்பார்வையில் நேற்று செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டது. அகழ்வு பணிக்கு பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே சட்டத்தரணி ரனித்தா ஞானராஜா இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புதிதாக ஆறு மனித எலும்புக்கூடுகள் அடையாளப்படுத்தப்பட்டு சுத்தப்படுத்தப்பட்டு இலக்கமிடப்பட்டுள்ளது.

நான்கு மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டு நீதிமன்ற கட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளது.

141 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டு இலக்கமிடப்பட்டதுடன் 130 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டு நீதிமன்ற கட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளது. வழமையைப்போல அகழ்வுப் பணிகள் தொடர்ந்து நடைபெறும்.

இதேவேளை செம்மணி மனித புதைகுழிகளில் இருந்து மீட்கப்பட்ட சான்று பொருட்களை சுமார் 200 பேர் வரையில் பார்வையிட்டிருந்தனர்.

புதைகுழிகளில் இருந்து மீட்கப்பட்ட சான்று பொருட்கள் இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை மதியம் 1.30 மணி முதல் மாலை 05 மணி வரையில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. அவற்றை சுமார் 200 பேர் வரையில் பார்வையிட்டிருந்தனர். எவரும் அவற்றை அடையாளம் காட்டவில்லை.

தனிமனிதனோடு தொடர்புடைய சான்று பொருட்களை காட்சிப்படுத்தப்பட்டது. இனிவரும் காலங்களிலும் தனிமனிதனோடு தொடர்புடைய சான்று பொருட்கள் மீட்கப்பட்டால் அவற்றையும் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை செம்மணி மனித புதைகுழி அமைந்துள்ள அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் நடைபெற்ற ஸ்கான் பரிசோதனை தொடர்பான இறுதி அறிக்கை எதிர்வரும் மூன்று வாரத்தில் நீதிமன்றத்தில் சமர்பிக்கப்படும் - என்றார். (அ)

## தேசபந்துவை...

எதிராக எந்தவோர் உறுப்பினரும் வாக்களிக்கவில்லை என்பதுடன் , ஓர் உறுப்பினர் இந்த வாக்கெடுப்பில் நடுநிலை வகித்திருந்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாண்மையினர் அதாவது 113 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தால் இந்த பதவி நீக்கும் பிரேரணையை நிறைவேற்ற முடியும்.

ஆகவே 177 பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்திருந்த நிலையில் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளதான அறிவிப்பை சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன நேற்று சபையில் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தமன்னார்...

நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்ற அமர்வின் போது அமைச்சர் விமல் ரத்நாயக்கவிடம் கேள்வி ஒன்றை எழுப்பி இருந்தேன்.காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பது குறித்து மன்னார் மாவட்டத்தில் தற்போது போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எனவே மன்னாரில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி தொடர்பாக விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதற்கும் ஜனாதிபதியை சந்தித்து குறித்த விடயம் தொடர்பாக கலந்துரையாட வாய்ப்பை ஏற்படுத்தித் தருமாறு அவரிடம் கோரி இருந்தேன்.

என்னுடன் பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான்,பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க ஆகியோரும் இணைந்து இதற்கு பொறுப்பான அமைச்சரை சந்தித்து உரையாடினோம்.

குறித்த உரையாடலின் பலனாக நாளை வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு முக்கிய பிரதிநிதிகளுடன் பாராளுமன்ற வளாகத்தில் குறித்த கூட்டம் இடம்பெற உள்ளது. ஜனாதிபதியும் குறித்த கூட்டத்தில் கலந்துகொள்ளும் சந்தர்ப்பம் உள்ளது.

குறித்த கலந்துரையாடல் இடம்பெறும் வரை எவ்வித நகர்வும் முன்னெடுக்கப்படாது என உரிய அமைச்சர் தெரிவித்துள்ளார். குறித்த கூட்டத்தில் இறுதி முடிவை எடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன-என்றார்.

## மேலும் 6...

முன்னெடுக்கப்பட்ட அகழ்வு பணியில், 65 எலும்புக்கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி பகுதியில் "தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 01" மற்றும் "தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 02" என நீதிமன்றினால் அடையாளப்படுத்தப்பட்ட மனித புதைகுழிகளில் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறன.

இரண்டாம் கட்ட பணிகளுக்காக 45 நாட்கள் நீதிமன்றினால் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், நேற்று 31ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டது.

இரண்டாம் கட்டத்தின் இரண்டாம் பகுதி கடந்த 16 நாட்களாக முன்னெடுக்கப்படும் நிலையில் இன்று வரையில் 65 எலும்பு கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி மனித புதைகுழியில் அகழ்வு பணிகள் இதுவரையில் கட்டம் கட்டமாக 40 நாட்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன்போது, நேற்று அகழ்ந்து எடுக்கப்பட்ட 4 எலும்பு கூட்டு தொகுதியுடனுமாக 130 எலும்பு கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன், இதுவரையில் 141 எலும்பு கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இன்றும் செம்மணியில் தற்போதுள்ள மனித புதைகுழிகளை விட அயலில் மேலும் மனித புதைகுழிகள் உள்ளனவா என்பதனை ஆராயும் நோக்கில், ஸ்கான் நடவடிக்கைகளை முன்னெடுக்கப்பட்டது. (அ)

# பாராளுமன்றை அரசாங்கம் கைபொம்மையாக்க முயற்சி

### நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு



கொழும்பு, ஓக. 06

தேசபந்து தென்னக்கோனை பொலிஸ் மா அதிபர் பதவியிலிருந்து நீக்குவதற்கான பிரேரணை முறையாக முன்வைக்கப்படவில்லை என பொது ஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தேசபந்து தென்னகோனை பொலிஸ் மாஅதிபர் பதவியிலிருந்து நீக்குவதற்கான பிரேரணை தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்றத்தின் நடைமுறை விதிகளை மீறுவதை நிறுத்துங்கள். பாராளுமன்றத்தை ஆளும் கட்சியின் ஒரு பொம்மையாக மாற்றாதீர்கள். நீங்கள் உங்களுடைய திட்டங்களை ஒழுங்கின்படி அமல்படுத்துகிறீர்கள். ஆனால் நடைமுறை விதிகள் பின்பற்ற முடியுமாயிருந்தும் பின்பற்றவில்லை.

நீங்கள் அரச நிர்வாகத்தை முழுமையாகஅடக்கி ஆள முற்படுகின்றீர்கள் கடற்படையின் தளபதி கைது செய்யப்பட்டுள்ளார். அவரை நீதிமன்றத்தில் கொண்டு சென்றனர். பின்னர் அவரை அடையாளம் காணும் வரிசையில் நிறுத்துகிறார்கள்.

இத்தகைய பின்னணியில் தேசபந்து தென்னக்கோனை பொலிஸ் மாஅதிபர் பதவியிலிருந்து நீக்குவதற்கான பிரேரணை குறித்த விடயத்தில் நடுநிலை வகிக்க தீர்மானித்துள்ளேன்-என்றார். (அ)

## மனிதப் புதைகுழி...

கொக்குத்தொடுவாய் கூட்டுப் புதைகுழி தளங்களில் இருந்து மீட்கப்பட்ட தனிப்பட்ட உடைமைகளை அடையாளம் காண்பதில் பொதுமக்களின் உதவியை நாடும் தீர்மானம், இலங்கையில் உண்மை, நீதி மற்றும் நல்லிணக்கத்தை நோக்கிய ஒரு குறிப்பிடத்தக்க மற்றும் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்டதோர் நடவடிக்கையாகும்.

பல தசாப்தகாலமாக தமது அன்புக்குரியவர்களின் நிலை குறித்து அயராது, திடமாக பதில்களைத் தேடிவரும் காணாமல்போனோரின் குடும்பங்களுடன் இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகம் உறுதியாக நிற்கிறது. உண்மை மற்றும் நீதியைப் பின்தொடர்வதில் அவர்களது தாங்கும் வல்லமை ஒரு தார்மீக வழிகாட்டியாக தொடர்கிறது.

இலங்கை அரசாங்கம், குறிப்பாக காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் தமது பணியை வெளிப்படைத் தன்மையுடனும், விரைவாகவும், காணாமல் போனோரின் குடும்பங்களுடனான அர்த்தமுள்ள ஆலோசனைகளுடனும் நிறைவேற்றவேண்டும் என அவ்வறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ)

## செம்மணி...

கண்காணிக்கப்படும் தடயவியல் விசாரணைக்கு உதவவேண்டும்.

ஐக்கிய நாடுகளின் இலங்கை பொறுப்புக்கூறல் திட்டத்தின் நீடிப்பை ஆதரிக்கவேண்டும்.

போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்காக நம்பகத்தன்மையுடன் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக இலக்கு வைக்கப்பட்ட தடைகளைச் செயல்படுத்தவேண்டும். அதேநேரம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் ஒரு பார்வையாளராக, இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை மற்றும் பாதுகாப்புச் சபைக்கு அனுப்பும் தீர்மானங்களை ஆதரிக்கவேண்டும் என்றும் செனட்டர்கள் கோரியுள்ளனர்.

தமிழ் புலம்பெயர்ந்தோர், அவுஸ்திரேலிய சமூகத்துக்கு நிறையவே பங்களித்துள்ளனர். எனவே, அவர்களின் நீதிக்கான கோரிக்கைகள் செயல்படுத்தப்படுவதை உறுதிசெய்ய வேண்டியது அவுஸ்திரேலியாவின் பொறுப்பு என்று அந்த நாட்டு செனட்டர்கள் அவுஸ்திரேலிய அரசை வலியுறுத்தியுள்ளனர். (அ)

## பிரதி பாதுகாப்பு...

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்க்கட்சித் தலைவர் இன்று அக்கட்சித் தலைவர்களுடன் அதன் வரைவு குறித்து விவாதிக்க உள்ளார் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

மேலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளுக்கு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரின் நிலைப்பாடு தடையாக இருக்கலாம் என்பதே இந்த நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கான முக்கிய காரணம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனடிப்படையில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் நடந்த நேரத்தில் அருண ஜயசேகர கிழக்கு மாகாணத்தின் தளபதியாக பணியாற்றியதால் இந்த நிலைமை ஏற்பட்டதாக கட்சியின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த உண்மைக்கு மேலதிகமாக, பல காரணிகளின் அடிப்படையில் நம்பிக்கையில்லா தீர்மானம் தயாரிக்கப்படும் என்று கூறப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## மாகாண சபை...

தீர்க்கப்படும்போது தேர்தல்கள் ஆணைக்குழு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் தயாராக இருக்கின்றது என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சமன் சிறி ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் 2026 முதல் 2029 வரையான பங்களிப்பு மூலோபாயத் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்ட தேர்தல்கள் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் சட்டத்தரனி எம்.பி.எம். சுபியான் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் பிரதம அதிதியாக தேர்தல்கள் ஆணையாளர் சமன் சிறி ரத்நாயக்க கலந்து கொண்டார்.

மூலோபாயத்திட்டம் தொடர்பாக அரச அதிகாரிகள், உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள், மற்றும் தேர்தல்கள் கண்காணிப்பு செயற்பாட்டில் ஈடுபட்ட நபர்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளும் பதிவு செய்யப்பட்டன.

தேர்தல்களில் மக்களின் வாக்களிப்பு பங்கேற்பை அதிகரித்தல், தேர்தல் சட்டம் தொடர்பிலான விழிப்புணர்வை ஏற்படுத்துதல், சுதந்திரமான, நியாயமான தேர்தலை உறுதி செய்தல் போன்ற மேலும் பல விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் கே.ஜே.எஸ்.மாதவ், திட்டமிடல் பணிப்பாளர் சன்ன பி.டி. சில்வா மற்றும் தேர்தல் அலுவலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# தேசிய பாதுகாப்புக்கு இப்போது எவ்வித அச்சுறுத்தலும் இல்லை!

## பாதுகாப்புச் செயலர் கூறுகிறார்

கொழும்பு, ஒக. 06

**தேசிய பாதுகாப்புக்கு தற்போது எவ்வித அச்சுறுத்தலும் இல்லை என பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் (ஓய்வு) சம்பத் துய்யகொந்தா தெரிவித்தார்.**

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்துக்கு சீனா நன்கொடை அளிக்கும் அதிகாரபூர்வ விழாவில் பங்கேற்றபோதே பாதுகாப்புச் செயலாளர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய பாதுகாப்புக்கு ஒரு பிரச்னையும் இல்லை. இன்று உங்களுக்கு எந்த பிரச்னையும் இல்லாமல் இங்கு வர முடிந்தது தானே. பாதாள உலகம் தேசிய பாதுகாப்புடன் நேரடியாக தொடர்புடையது அல்ல. இது பொது பாதுகாப்பு அமைச்சினால் கட்டுப்படுத்தப்படுகிறது. தேசிய பாதுகாப்புக்கும் பொலிஸாருக்கும் தேவையான ஆதரவை நாங்கள் வழங்குகிறோம். தேசிய பாதுகாப்புக்கு எந்த ஆபத்தும் இல்லை. பாதாள உலகம் குழப்பத்தில் உள்ளது. பாதாள உலகம் குழப்பத்தில் இருக்கவேண்டும். ஏனெனில் பாதாள உலகம் அரசியல் பாதுகாப்பை இழந்துவிட்டது. அதனால் தான் பாதாள உலகம் குழப்பத்தில் உள்ளது.

பாதாள உலக நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். பொது பாதுகாப்பு அமைச்சு வேலைத்திட்டம் ஒன்றை செயல்படுத்துகிறது. அதற்கு சட்ட கட்டமைப்பிற்குள் நாங்கள் கட்டுப்பாடுகளை வழங்குகிறோம்-என்றார். (அ)

---

## இரண்டாயிரத்துக்கும் அதிகமான துப்பாக்கிகள் ஜூலை வரை மீட்பு

கொழும்பு, ஒக. 06

இந்த வருடத்தின் ஜூலை 31 ஆம் திகதி வரை 2,089 சட்ட விரோதத் துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

நேற்று பாராளு மன்றத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் போதைப்பொருள் சோதனைகளும் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார். (அ)

---

## புதிய எல்லை நிர்ணய குழுவை நியமிக்க அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஒக. 06

2012 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நியமிக்கப்பட்ட குழுக்களின் பரிந்துரைகளை மீளாய்வு செய்வதற்கும் மேலதிக பரிந்துரைகளை வழங்குவதற்கும் புதிய எல்லை நிர்ணயக் குழுவை நியமிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை நிறுவுதல் மற்றும் மீளாய்வு செய்வதற்காக 2012 ஆம் ஆண்டு எல்லை நிர்ணயக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பின்னர் 2021 ஆம் ஆண்டில் மீண்டும் எல்லை நிர்ணயக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த குழுவின் விதந்துரைகள் தொடர்பாக இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

குறித்த குழுக்களின் பரிந்துரைகளை மீளாய்வு செய்வதற்கும் மேலதிக பரிந்துரைகளை வழங்குவதற்கும் புதிய எல்லை நிர்ணய குழுவை நியமிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (அ)

---

## இலங்கைக்கு வருகிறார் ஆஸி. ஆளுநர் நாயகம்!

கொழும்பு, ஒக. 06

ஆஸ்திரேலிய ஆளுநர் நாயகம் சமந்தா ஜாய் மோஸ்டின் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வரவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இன்று வருகைதரும், சமந்தா ஜாய் மோஸ்டின் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பார் என அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த அரசமுறை விஜயத்தின் போது ஜனாதிபதி மற்றும் பிரதமரை சந்தித்து இருதரப்பு கலந்துரையாடல்களில் ஈடுபடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

பண்டாரகம, மிரிஸ்ஸ மற்றும் வெலிகம ஆகிய இடங்களில் உள்ள ஆஸ்திரேலிய ஆதரவுடன் இயங்கும் திட்டங்களையும் அவர் பார்வையிடவுள்ளார். (அ)

---

## தேசபந்துவின் முன் பிணை மனு ஆட்சேபனைக்கு கால அவகாசம்

கொழும்பு, ஒக. 06

பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ள காவல்துறை மா அதிபர் தேசபந்து தென்னகோன் தாக்கல் செய்த முன் பிணை மனுவுக்கு, எதிராக எழுத்துபூர்வ ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்யக் கொழும்பு கோட்டை நீதவான் நிலுபுலி லங்காபுர ஒகஸ்ட் 7 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கினார்.

எழுத்துபூர்வ ஆட்சேபனைகள் சமர்ப்பிக்கப்பட்டுப் பரிசீலிக்கப்பட்டதைத் தொடர்ந்து விரைவில் பொருத்தமான உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் உள்ள காலி முகத்திடலில் போராட்டக்காரர்களைக் கலைத்த சம்பவம் தொடர்பான விசாரணையில் சந்தேக நபராக மனுதாரர் கைது செய்யப்பட்டால், பிணை வழங்க நீதிமன்ற உத்தரவைக் கோரி முன் பிணை மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

மனுதாரருக்காக ஜனாதிபதி சட்டத்தரணி அஜித் பத்திரண, சட்டத்தரணி தரிந்து விக்ரமராச்சி மற்றும் ஆயிஷா கமகே ஆகியோருடன் ஆஜரானார்.

குற்றப் புலனாய்வுத் துறையின் சிறப்புப் புலனாய்வுப் பிரிவின் சார்பாக சிரேஸ்ட அரச சட்டத்தரணி ஆஸ்வால்ட் பெரேராநேற்று நீதிமன்றத்தில் ஆஜரானார். (அ)

---

## முதலீட்டு வரம்பை உயர்த்தும் வர்த்தமானிக்கு அங்கீகாரம்!

கொழும்பு, ஒக. 06

உள்ளூர் நிறுவனங்கள் வெளிநாட்டில் முதலீடு செய்வதற்கான நடைமுறைகளை எளிமைப்படுத்தும் நோக்கில் வெளியிடப்பட்ட புதிய மட்டுப்பாடுகள் அடங்கிய வர்த்தமானிக்கு அரசாங்க நிதிப் பற்றிய குழுவில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்க நிதி பற்றிய குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தலைமையில் பாராளுமன்றத்தில் கூடியபோதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

அதற்கமைய, பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்கான முதலீட்டுக்கான மட்டுப்பாடுகள் 500,000 அமெரிக்க டொலரில் இருந்து 750,000 அமெரிக்க டொலர்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

பட்டியலிட்படாத கம்பனிகளுக்கான மட்டுப்பாடுகள் 150,000 அமெரிக்க டொலரிலிருந்து 200,000 அமெரிக்க டொலர்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த எல்லைக்கு அப்பால் முதலீடு செய்ய விரும்பும் நிறுவனங்கள் வெளிநாட்டு மூலங்களிலிருந்து 2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையில் கடன் வாங்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், 2 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான எந்தவொரு முதலீட்டுக்கும் விசேட அனுமதி அவசியம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை,

துறைமுகத்தில் 1,000 இற்கும் மேற் பட்ட கார்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக குழுவில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

வாகனங்களின் இயந்திரக் கொள்ளளவை குறைத்து சுங்க வரிகளை தவிர்க்க முயற்சித்ததாக சந்தேகம் எழுந்துள்ளதால் அது குறித்து விசாரணை நடந்து வருவதாக சுங்க அதிகாரிகள் குழுவில் தெரிவித்தனர்.

இந்தநிலையில், சர்வதேச தரங்களை பின்பற்ற அதிகாரிகளை குழுவின் தலைவர் வலியுறுத்தியுள்ளார். (அ)

---

## தவறு செய்த ஏனையவர்களையும் தேசபந்து போல கையாளவேண்டும்

### முஜிபுர் ரஹ்மான் சபையில் கோரிக்கை

கொழும்பு, ஒக. 06

முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனை கையாண்டதைப் போலவே தவறு செய்த ஏனையவர்களும் கையாளப்பட வேண்டும், ஏனெனில் அவர்கள் குற்றங்களைச் செய்துள்ளனர் என்று எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும்போதே இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதியின் செயலாளரின் மனைவி பயணித்த வாகனம் பலரை இடித்து காயப்படுத்தியதாக நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம்.

ஜனாதிபதியின் செயலாளர் தனது பதவியை இராஜினாமா செய்யவேண்டும். இருப்பினும், அது நடக்கவில்லை.

ஜனாதிபதியின் சில பாதுகாப்பு அதிகாரிகள், அரச தலைவருடன் வெளிநாட்டுப் பயணத்திற்குப் பிறகு திரும்பும்போது மதுபானம் வாங்கியதற்காக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த அதிகாரிகள் பணிநீக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும். தேசபந்துவை நீங்கள் கையாளும் விதத்தில் இந்த நபர்களையும் நீங்கள் கையாளவேண்டும்-என்றார். (அ)

---

## அரசின் தவறை சுட்டிக்காட்ட நன் பின்னிற்க போவதில்லை!

### கூறுகின்றார் உதய கம்மன்பில

கொழும்பு, ஒக. 06

அரசாங்கத்தின் தவறுகளை சுட்டிக்காட்ட தாம் ஒருபோதும் பின்வாங்க போவதில்லை என பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடனான சந்திப்பின் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-முதலில் சொல்ல வேண்டியது என்னவென்றால், பல சக்தி ஊழல் எதிர்ப்பு முன்னணி என்பது ஒரு அரசியல் கட்சி அல்ல.

இங்கு கட்சி வேறுபாடுகள் எதுவும் இல்லை. யாராவது ஊழலுக்கு எதிரானவராக இருந்தால், அவர்கள் எங்களுடன் சேரலாம்.

ஜே.வி.பி. கூட தங்களது செயல் தவறென்று உணர்ந்தால், அவர்கள் கூட எங்களுடன் சேரலாம். இது அரசியல் அல்ல.

இந்த அரசாங்கத்தின் ஊழலைப்பற்றித் பாராளுமன்றத்தில் குரல் கொடுப்பது என்பது நாட்டின் எதிர்க்கட்சித் தலைவரின் முக்கிய பொறுப்பாகும்.

அந்த பொறுப்பை நிறைவேற்ற தேவையான தகவல்களை வழங்குவதற்காகத்தான் நாம் எதிர்க்கட்சித் தலைவரை சந்தித்தோம்.

இங்கு அரசியல் பேதங்களை உருவாக்காதீர்கள். ஊழல் எதிர்ப்பு இயக்கத்தை அரசியல் நோக்கத்தில் பிளவுபடுத்தாதீர்கள்.

இந்த இயக்கத்திற்கு அரசியல் கிடையாது. அரசாங்கம் தவறாக எதையாவது செய்கிறது என்றால், கட்சி பேதங்களை மறந்து, முதுகெலும்புள்ளவர்கள் ஒன்றிணைந்து அதைப்பற்றி எடுத்துக் காட்ட வேண்டும்-என்றார். (அ)

---

## பிரதேச சபை உறுப்பினருடன் 15 பேர் சூதாட்ட நிலையத்தில் வைத்து கைது

கொழும்பு, ஒக. 06

அநுராதபுரம் - இப்பலோகம பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் சட்டவிரோதமாக இயங்கி வந்த சூதாட்ட நிலையம் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இப்பலோகம பிரதேச சபையின் உறுப்பினர் உட்பட 15 பேர் இப்பலோகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இப்பலோகம பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இப்பலோகம, மடாடுகம, கெக்கிராவை, எப்பாவல, கட்டியாவ, கரம்பேவ, தென்னேவ மற்றும் கல்னேவ ஆகிய பிரதேசங்களில் வசிப்பவர்களே கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இப்பலோகம பிரதேச சபையின் உறுப்பினரின் தலைமையில் இந்த சூதாட்ட நிலையம் இயங்கி வந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.08.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.